இதழ் 184

# மண்

ஜேர்மனி / 2017
ஆடி - ஆவணி / July - August



## இசைப்பேழை வெளியீட்டுவிழா
## யேர்மனி - 2017



சங்கீத ஆசிரியை திருமதி கலைவாணி ஏகானந்தராசா அவர்களின்
இறுவெட்டு வெளியீட்டுவிழா - 04.06.2017 யேர்மனி



# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



| | |
|---|---|
| முகவரி: | V. Sivarajah<br>Am Windhoevel 18a<br>47249 Duisburg<br>Germany |
| தொலைபேசி: | 0203/8073898 |
| தொலைநகல்: | 0203/8073898 |
| மின்னஞ்சல்: | v.sivarajah@arcor.de |
| வங்கிவிபரம்: | Mann (Erde) Verein e.V. Duisburg<br>Stadtsparkasse Duisburg<br>Kontonummer: 225 000 421<br>Bankleitzahl: 350 500 00<br>IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21<br>SWIFT-BIC: DUISDE33XXX |

# எங்கள் கருத்து...

இலங்கையில் இனமுரண்பாடுகளும் இனவன்முறைகளும் நீண்டுகொண்டேயிருக்கின்றன. இலங்கை சுதந்திரம் பெற்றது என்று கூறப்படும் 1948 ஆண்டு தொடக்கம் இனங்களுக்கிடையிலான உறவுகள் இன்னும்தான் சீர்பெறாமல் நீண்டுகொண்டிருப்பது வேதனைதரும் விடையமாகும். தமிழர்கள் ,சிங்களவர்கள், இசுலாமியர்கள், மலையகத் தமிழ்மக்கள் என இலங்கைவாழ் இனங்களிடையே இது முற்றுப்பெறாத இந்தத்தொடர்கள் போராட்டம் சார்ந்ததாகும். தமிழ்பேசும் மக்களின் அகிம்சைப் போராட்டம் ஆயுதப்போராட்டம் என முடிவுக்கு வந்த பின்னரும் தொடரும் இந்தப்போராட்டம், அகிம்சைவழியில் தொடர்ந்தாலும், அதற்கும் அச்சுறுத்தல், தாக்குதல், எச்சரிக்கை என்பன அரச மட்டத்தில் நிகழ்த்தப்படுகிறது.

யுத்த காலத்தில் காணாமல் போனவர்களைத் தேடித்தாருங்கள் என்ற கோரிக்கையுடன உறவுகள் நடத்தும் கண்ணீர் போராட்டம். கேப்பாபிலவில் எங்கள் காணிகளை மீட்டுத்தாருங்கள் என்று காணிகளை இழந்தவர்கள் நடத்தும் நிலமீட்பு போராட்டம். தனியார் மருத்துவக்கல்லூரி வேண்டாம் என்று சட்டத்திற்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் மருத்துவக் கல்விக்கான உரிமைப்போராட்டம். வேலையில்லாத பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்குகள் என்று வாழ்வாதாரம் கேட்டு பட்டதாரிகள் தொடரும் போராட்டம்.

பாடசாலை மாணவிகளுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்களை கண்டித்து பெற்றவர்களும் பாடசாலை மாணவர்களும் அடிக்கடி நடத்தும் வீதி மறியல் போராட்டம். இப்படியாக வாழ்வே போராட்டமாக மாறியிருக்கின்றது. அண்மையில் இசுலாமிய மக்களுக்கெதிரான போராட்டங்களும் அதிகரித்திருப்பயையும் அவதானிக்கின்றோம். இத்தனையும் இந்த நல்லாட்சியில் தொடர் காட்சிகள். இந்தப்பின்னணிகளுடன், முன்னர் பதவியிலிருந்த பொது எதிரணி மீண்டும் ஆட்சியை பிடிப்பதற்காக அவ்வப்போது நடத்திக்கொண்டிருக்கும் போராட்டங்கள். இவற்றைவிட இனவாதிகள் இனமுரண்பாடுகளை அதிகரிக்கவும் போராடும் இழிநிலையும் நாட்டில் காணப்படுகின்றன.

இவற்றைவிடத் தொழிற்சங்கங்கள் இணைந்து ஒரு போராட்டத்தை தொடங்கப் போவதாகவும் தெரிய வருகிறது. இத்தனை போராட்டங்களும் ஒரு புறம் நடந்துகொண்டிருக்கையில், இந்தப்போராட்டங்கள் பற்றிய செய்திகளை மக்களிடம் எடுத்துச் செல்லும் ஊடகவியலாளர்கள் அடிக்கடி நடத்திக் கொண்டிருக்கும் கருத்துரிமைப் போராட்டமும் இலங்கையில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

மொத்தத்தில் எந்தத்தீர்வினையும் எட்ட முடியாமல் போராட்டங்களே காட்சி மாற்றங்களுடன் அரங்கேறிக்கொண்டிருக்கும் இந்த நல்லாட்சியில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் தத்தமக்குள் உரசிக்கொண்டு மற்றும் ஒரு நிழல் போராட்டத்தை நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன. ஆக, மொத்தத்தில், இன்று இலங்கையில் ஆயுதப்போராட்டம் நடக்காதுவிட்டாலும், தொடர்ச்சியாக நடைபெறும் அகிம்சைப்போராட்டங்களுக்கு எதிரான தடியடி தாக்குதலும், கண்ணீர் புகைக்குண்டு வீச்சும் நிகழ்த்தப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு உயிருக்குப் போராட்டம். தமது சொந்த நிலங்களில் குடியேறி வாழமுடியாமல் போராடும் மக்களின் நிலை இருந்து வருகையில், மீள் குடியேறிகாணாமல் போனவர்களை தேடித்தாருங்கள் என கண்ணீர்விட்டுக் கதறி அழும் மக்களின் போராட்டம் நசுக்கப்பட்டும் வருகின்றன. போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் உண்ணாவிரதம் இருந்தும் பலன் இல்லை. அண்மையில் ஒரு தாய் தனது மகனை மீட்டுத்தாருங்கள் என்று கத்திக்கத்தியே இறுதியில் தனது உயிரையும் விட்டுவிட்டார் இந்தப்பின்னணிகளை அவதானித்துக்கொண்டே, ஊடகவியலாளர்களின் படுகொலைகளை கண்டித்தும், காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூர்ந்தும் கொழும்பில் இயங்கும் தமிழ் ஊடகவியாலாளர்கள் ஒன்றியம் போராட்டத்தையும் நடத்திள்ளது.

இப்படியாகத் தமிழ்–இசுலாமிய–மலையக மக்கள் வாழும் இடங்களெல்லாம் போராட்டம் என்னும் அவலவாழ்வே நியதியாகிவிட்டது என்றே கூறவேண்டும். பாதிக்கப்டவர்களின் அவலநிலைகளை உலகிற்குத் தெரியப்படுத்தியும் விடிவு அல்லது நல்ல முடிவு எட்டமுடியாமலே பாதிக்கப்பட்ட இலங்கைவாழ் இனங்கள் தவிக்கின்றன. ஆட்சியும் மாறும், காட்சிகளும் மாறும் ஆனால் இனமுரண்பாடுகள் இன்னும்தான் மாறவே இல்லை!...

-ஆசிரியர்-

# ஆத்திசூடி விளக்கம்...




## தேசத்தோடு ஒத்துவாழ்..

நீ வசிக்கும் தெருவில் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கின்றது. தெருவின் இரு சாரியில் உள்ள வீட்டுக்காரர்களும் ஒற்றுமையாக பிள்ளையாருக்கு விழா எடுப்பார்கள். ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தி அன்று ஏனோ உனக்கு இதில் நாட்டமில்லை. அதனால் தெருவாசிகளோடு நீ ஒத்துழைக்காமல் இருக்கலாமா? கூடாது. உனக்கு விருப்பமில்லாது போனாலும் அவர்கள் நடத்தும் சதுர்த்தி விழாவில் நீ கலந்து கொள்ளுவதுதான் முறை. நீ பங்குகொள்ளாவிடில் அவர்கள் உன்னை வெறுப்பார்கள். பகைமை பாராட்டுவார்கள். ஆகவே தெருவாசிகளோடு ஊராரோடு ஒத்துப்போவதுதான் அறிவுடையவர் செயலாகும். தெருவாசிகள் போலத்தான் ஊரும் நாடும். நாட்டு மக்களோடு கலந்து ஒத்துப்போய் அவர்கள் வழி நடப்பதுதான் முறை என்று அறிவுரை வழங்குகிறார் ஔவைப்பாட்டி.

## தையல் சொல் கேளேல்..

தையல் என்றால் ஆடைகளைத் தைப்பது அல்ல. தூய தமிழில் பெண்ணுக்குத் தையல் என்று ஒரு சொல் உண்டு. பெண்களுக்குப் பூ மனம். கணவனைப் பெரியோர்களை உபசரிக்க, குழந்தைகளைக் காக்க, ஏழைகளுக்கு உதவ, இளகிய மனம் தேவை. இவை எல்லாம் வீட்டில் இருந்து செய் பவை. அந்தக் காலப் பெண்களைப் பற்றிக் கூறுகிறார் ஔவைப்பாட்டி. வெளி உலகத்தைப் பற்றி அதிகம் அறியாது வாழ்ந்த அக்காலப் பெண்களுடைய யோசனைகளைக் கேட்காதே, அது தவறான முடிவைத் தரலாம் என்று ஆனால் எதிலும் முதலாவதாக நிற்கும் இன்றைய பெண்களுக்கு இது பொருந்தாது. தையல் - பெண் இன்று நாட்டையே உலகையே வழிநடத்திச் செல்வதில் திறனுள்ளவளாக, வல்லவளாக முன்னேறிவிட்டாளே...

# கொன்றைவேந்தன்... (தொடர்ச்சி)

39.திரை கடல் ஓடியும் திரவியம் தேடு..
அலை வீசுகின்ற கடலுக்கு அப்பால சென்றாலும் திரவியம் தேடு. அதாவது பொருளைத் தேடு. கடல் கடந்து ஓடிச் சென்றாலும் பொருளைத் தேடிக்கொள்.

40.தீராக் கோபம் போராய் முடியும்..
தீராத கோபமானது போரில் முடிந்துவிடும். அதாவது நீங்குதலடையாத கோபம் சிலவேளைகளில் கலகமாக, சண்டையில்தான் போய் முடிவடைந்துவிடும்.

41.துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு..
கணவருக்குத் துன்பம் வந்தால் மனம் பதையாத பெண்கள் மடியில் வயிற்றில் கட்டிய நெருப்புப் போன்றவள்.

42.தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்..
எப்போதும் அவதூறு பேசிக்கொண்டு திரிகின்ற பெண் குடும்ப வாழ்க்கைக்கு யமன் என்று கூறலாம்.

43.தெய்வம் சீறின் கைதவம் மாளும்..
ஒருவன்மீது தெய்வம் கோபம் கொண்டால் கைகூடிய தவமும் அழிந்துவிடும். ஆகவே கடவுள் பழிக்கு ஆளாகாமல் வாழவேண்டும்.

44.தேடாது அழிக்கின் பாடாய் முடியும்..
மேலும் பொருளைத் தேடாது உள்ள பொருள் அழிந்திட உண்டால் வருத்தமாகவே முடியும். அதாவது வருந்திப் பொருளைத் தேடாதுவிடின் இருக்கும் பொருளும் அழிந்துவிடும்.

45.தையும் மாசியும் வையகத் துறங்கும்..
தை மாசி மாதங்களிலே வையகத்து வைக்கோலால் வேய்ந்த வீட்டிலே உறங்கு. நித்திரை செய் உடல் ஆரோக்கியம் பெறும்.

46.தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது..
பூமியை உழுது பயிர்செய்து உண்பதுதான் இன்பம் தரும். தொண்டு செய்து கிடைக்கும் பலனைவிட உழுது பயிர் செய்து உழைத்து உண்பதே சிறப்பாகும்.

# சிறுதுளி பெரு வெள்ளம்

ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் தனது தந்தையாருடன் வசித்துவந்தான். அவன் பரீட்சையில் சித்திபெற்றமையினால் தனக்கு ஒரு சைக்கிள் வெண்டித்தரும்படி அடம்பிடித்தான். ஆனால் அவனது அப்பா ஒரு உண்டியலை மட்டும் வேண்டிக் கொடுத்தார்."அப்பா நான் சைக்கிள் கேட்டதற்கு உண்டியலை ஏன் தருகிறீர்கள்" என்று சிறுவன் கேட்டான். அவர் ஒன்றும் கூறவில்லை. மகனை அழைத்த அவர் "சமையறைக் குழாயில் நீர் கசிகின்றது. கீழே ஒரு பாத்திரத்தை வை வீணாகப்போகும் நீர் எமக்குப் பயன்படும்" என்றார். சொட்டுச் சொட்டாகக் கசியும் நீர் வீணானால் என்ன இழப்பு வந்துவிடப் போகிறது என்று சிறுவன் சிணுங்கியபடி பாத்திரத்தை அந்த இடத்தில் கொண்டுபோய் வைத்தான்.

காலையில் "மகனே குழாய்க்குக் கீழே வைத்த அந்தப் பாத்திரத்தை எடுத்துவா" என்று தந்தை கூறினார். மகன் அறைக்குள் சென்று பார்த்த போது பாத்திரம் நிரம்பியிருப்பதைக் கண்டான். அப்போது அவனுடைய தந்தை "பார்த்தாயா சிறுகச் சிறுகச் சேமித்தால் என்றும் நீ பயனை அடையலாம்" என்றார். எனவே நான் உனக்குக் கொடுத்திருக்கும் உண்டியலிலும் சிறிது சிறிதாகப் பணம் சேர்த்து வைத்தால் சைக்கிளை வாங்கலாம்" என்றார். சிறுவனும் மகிழ்ச்சியுடன் உண்டியலில் பணம் சேர்க்கத் தொடங்கினான்!...

செல்வி சிறீ சுகன்ஜா
ரூத் மிஷன்-கிளிநொச்சி

---

நன்றிகள்!.....

மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு

செல்வன் சிவகாந்த்-சிவராசா
Duisburg

# பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது....

ஒரு சிறுவன் வானத்தில் நடைபெறும் அற்புதங்களை எல்லாம் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தான். எந்த நேரமும் அவன் வானத்தைப் பார்த்தவாறே இருப்பான். வானத்து நட்சத்திரங்களையோ அல்லது வியாழன் , சுக்கிரன், செய்வாய் போன்ற கோள்களைப் பற்றியே எப்போது பார்த்தாலும் சிந்தித்து ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பான். எங்காவது நடந்து செல்லும்போதுகூட அவன் பார்வையும் சிந்தனையும் வானத்தின் மீதுதான் இருக்கும்.

ஒரு நாள் இரவு நேரத்தில் வழக்கம்போல அவனது பார்வை வானத்தின் மீதுதான் இருந்தது. ஏதோ ஒரு நட்சத்திரத்தைப்பற்றி மனதுக்குள்ளேயே சிந்தனை செய்த வண்ணம் அவன் நடந்து கொண்டிருந்தான். அவன் நடந்து சென்ற பாதையில் பெரிய திறந்த கிணறு ஒன்று இருந்தது. அவனுக்குத் தெரியவில்லை. அவன் தான் வானத்தைப் பார்த்தவாறே நடக்கிறானே திடீரென்று அவன் கிணற்றுக்குள் விழுந்துவிட்டேனே என்று கூக்குரலிட்டான். நல்ல வேளை கிணற்றில் நீர் அதிகமாக இல்லாதபடியால் அவனது உயிருக்கு ஆபத்து எதுவும் ஏற்படவில்லை.

அப்போது அங்குவந்த ஒரு முதியவர் "குழந்தாய் நீ வானத்து அற்புதங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வது பாராட்டப்பட வேண்டிய பணிதான். வானத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தாலும் இந்த உலகத்தில்தான் நீ வசித்து வருகிறாய் என்பதை மறந்து விடாதே. ஆகவே நீ "வாழ்க்கை நடத்தும் இந்த உலகத்தைப் பற்றியும் கவனமாகச் சிந்தனை செய்ய மறவாதே" என்று அறிவுரை கூறினார்!..

செல்வி ஜக்சினா யோகராசா
ரூத் மிஷன்-கிளிநொச்சி

பொன்மொழிகள்:-

-பலவற்றை ஒன்றாக்குவது அன்பின் குணம். ஒன்றைப் பலதாக்குவது பகையின் குணம்.

-உன் வசதிக்கும் வருவாய்க்கும் ஏற்ற வகையில் வாழ்க்கை நடத்து. கையில் இருக்கும் துணியை அளந்து கொண்டு சட்டையை வெட்டு.

# நன்றி மறவாத கிளி.......

பல பறவைகள் ஒரு மரத்தில் கூடுகட்டி வசித்து வந்ததுடன் அம்மரத்தில் பழக்கும் பழங்களையும் உண்டு மகிழ்ந்து வந்தன. ஒரு சமயம் மழை இல்லாமையினால் மரம் வாட ஆரம்பித்தது. அதன் இலைகள் உதிர்ந்தன. பூக்கவில்லை. பழக்கவில்லை அம்மரங்கள். அம்மரத்தை நம்பி அது காய்க்கும் பழங்களை நம்பி வாழ்ந்த பறவைகள் வேறு இடங்களைத் தேடிப் பறக்க ஆரம்பித்தன. ஒரு கிளி மட்டும் அந்த மரத்தை விட்டுப் போகாமல் அந்த இடத்தில் இருந்தது. பட்டினியால் வாடியது. தினமும் கடவளை வேண்டியது.

ஒரு நாள் கடவுள் அந்தக் கிளி முன்னே தோன்றி "தினமும் என்னை வேண்டுகிறாயே...உனக்கு என்ன வேண்டும்" என்றார். "இறைவா இந்த மரம் வேண்டும். பூத்துக் காய்க்க வேண்டும்" என்றது கிளி. இந்த மரத்தைப் பற்றி யோசிக்காமல் மற்றப் பறவைகள் போல் நீயும் பறந்திருக்கலாமே என்றார் கடவுள். அதற்குக் கிளி "இந்த மரம் பழத்து இதுநாள்வரை எங்களைக் காத்தது. இது இன்று தண்ணீர் இன்றித் துன்பப்படுகிறது, இச்சமயத்தில் நம்மைக் காத்ததை மறந்து இதை விட்டுப் பறந்தால் இது சுயநலமில்லையா...பாவம் இல்லையா...என்றது கிளி.

கிளியின் சுயநலமற்ற தன்மையைப் போற்றிய இறைவன் அம்மரம் மீண்டும் தளைக்க மழையைப் பொழிய வைத்து அருளினார். எனவே இந்தக் கதைமூலம் ஒருவர் செய்த நன்றியை மறக்காது அவர் துன்புறும் போது அவர்களுடன் சேர்ந்த உதவி செய்து ஆறுதலாக வாழவேண்டும் என்பதைப் புரிந்து கொள்வோம்!...

செல்வி ச சானியா
சுண்டுக்குளி மகளீர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

# கடவுளைக் குழப்பிய மன்னர்சாமி

ஓர் ஊரில் மன்னர் சாமி என்ற பெயருடைய ஒருவர் இருந்தார். அவரை எல்லோரும் முட்டாள் என்றும், பிழைக்கத் தெரியாதவன் என்றும் கேலி செய்து வந்தனர். இதைக் கேட்டுக் கேட்டு அந்த மனிதருக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. அந்த ஊரின் எல்லையல் ஒரு முனிவர் இருந்தார். அவரிடம் சென்று மன்னர்சாமி இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கேட்டார். கடவுளை நினைத்துத் தவம் செய் உனக்கு வேண்டிய வரத்தைக் கொடுப்பார் என்று அந்த முனிவர் கூறினார்.

மன்னர்சாமி கடுமையாகத் தவம் செய்தார். பல நாட்கள் சென்ற பிறகு கடவுள் அவர் எதிரில் தோன்றினார். "பக்தனே உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கடவுள் கேட்டார். "தவம் செய்தால் கடவுள் நேரில்வந்து வரம் கொடுப்பார் என்று அந்த முனிவர் சொன்னார் அதுதான் என்றார் மன்னர் சாமி. "என்ன வரம் வேண்டு கேள் என்றார் கடவுள். அதுதான் கேட்டேன் வரம் அதை...கொடு... என்றார் மன்னர்சாமி. இப்பொழுது கடவுளுக்குக் குழப்பம் வந்துவிட்டது. கடவுள் பிராயச்சித்தம் செய்துவிட்டால் யாருக்காவது வரம் கொடுத்தே ஆக வேண்டும்.

அதுவும் தவம் செய்தவருக்குத் தவறாமல் வரம் கொடுத்தே ஆக வேண்டும். என்ன செய்யலாம் என்று கடவுள் யோசித்தார். பக்தா நீ இப்பொழுது என்ன நினைக்கிறாயோ...அதையே வரமாகக் கொடுக்கின்றேன்...பெற்றுக் கொள்... போ...அய்ய......... ய்ய......யோ......நான் ஒன்றும் நினைக்கவே இல்லையே!.. அதுதான்....என்று சொல்லிவிட்டுக் கடவுள் மறைந்துவிட்டார். இதிலிருந்து என்ன தெரிகின்றது. "பலனை நோக்கிய உழைப்புத்தான் உயர்வைத்தரும்" எண்ணம் போல் வாழ்வும் கூட மனதில் நல்லதை நினைப்போம் நல்வழி செல்வோம்!...

செல்வி யாழரசி யோகராசா
ரூத் மிஷன் - கிளிநொச்சி

# தமிழுக்கு நிகரேது....

தமிழ் எழுத்துக்களில் பல சிறப்புக்கள் உண்டல்லவா..ஏனைய பல மொழிகளைவிட வேறுபட்ட உருவம் மட்டுமல்ல, ஒவ்வொரு குற்று, குறி, முற்றும்புள்ளி, சுழி, அரவு போன்ற அத்தனை உருவங்களுக்கும். தனித்தன்மை உண்டு. ஒரு சிறு புள்ளியோ..சுழியோ ஒரு சொல்லில் எழுதத் தவறும் பட்சத்தில், அல்லது தேவையில்லாமல் எழுதும்போது அந்தச் சொல்லின் கருத்து வேறுபட்டுவிடும். இப்படியாகப் பல சிறப்புக்கள் நிறைந்ததுதான் எங்கள் தமிழ்மொழி. சில உதாரணங்களை இங்கே பார்ப்போம்...

வி – வீ :–கண்ணன் விதி வழி நடந்தான்.
கண்ணன் வீதி வழி நடந்தான்.

நி – நீ :–குமரன் நிதி இல்லாமல் போராடினான்.
குமரன் நீதி இல்லாமல் போராடினான்.

ப – பு :–சாந்தன் பல் பிடுங்கினான்.
சாந்தன் புல் பிடுங்கினான்.

அ –ஆ :–வசந்தன் அணியுடன் வந்தான்.
வசந்தன் ஆணியுடன் வந்தான்.

ப – பா :–தண்ணீரில் பம்பு மிதந்தது.
தண்ணீரில் பாப்பு மிதந்தது.

ப – பி :–கணவனும் மனைவியும் பரிவோடு வாழ்ந்தனர்
கணவனும் மனைவியும் பிரிவோடு வாழ்ந்தனர்.

சி – சீ :–அவன் செய்த சிலை அழகானது.
அவன் செய்த சீலை அழகானது.

அ – ஆ:–அறுவடை செய்து உண்டு மகிழ்ந்தனர்.
ஆறுவடை செய்து உண்டு மகிழ்ந்தனர்.

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 4

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 93
## (புரட்டாதி-ஐப்பசி.2016)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

**இ – வ:**

01-03 தமிழர்கள் உயிரினும் மேலாக இதையும் கருதுவார்கள்.

10-12 பாடகன் எதிர்பாற்சொல்.

**வ – இ:**

08-05 சிறுவர்கள் மட்டுமல்ல பெரியோர்களும் விளையாடி மகிழ்வது.

16-14 உலகத்தின் முதற் கடவுள்.

**கீ – மே:**

10-02 சிலர் இந்தக் கலையில் வல்லவர்கள்

08-04 சாதுவான மிருகம்.

**மே – கீ:**

01-13 பெரும் புலவர் இவர்.

03-15 வட்டத்தின் அரைப்பங்கு இது.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

# விடுகதைகள்

1-இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாக ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல அது என்ன..

2-இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது அது என்ன..

3-உயிரில்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் அது என்ன..

4-ஆயிரம்பேர் அணிவகுத்தாலும் ஆரவாரம் இராது அவர்கள் யார்..

5-உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம் நான் யார்..

விடைகள்:-
சைக்கிள் - பட்டாசு - தராசு - எறும்புக்கூட்டம் - அஞ்சல்பெட்டி

செல்வி ச சானியா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

1-ஆடையில்லாத கறுப்பழகி ஆடிச்சுழன்று பாடுகிறாள். அவள் யார்..

2-வெட்டிக் கூறுபடுத்தி வைக்கிறார்களே தவிர எவரும் தின்பதில்லை அது என்ன..

3-மூன்று நிறக்கிளிகளாம் கூண்டில் போனால் ஒரே நிறம் அது என்ன..

4-அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது அது என்ன..

5-குளப்படிச் சத்தக்காரன், போருக்குக் கெட்டிக்காரன் அவன் யார்..

விடைகள்:-
இசைத்தட்டு - சீட்டுக்கட்டு - தாம்பூலம் - தண்ணீர் - குதிரை

செல்வி யூலிகா கிருஸ்ணன்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

## "கை" "கொ" பழமொழிகள்..........

1-கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.

2-கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா.

3-கைக்கோளனுக்குக் காற்புண்ணும் நாய்க்குத் தலைப்புண்ணும் ஆறா.

4-கைப்பொருளற்றால் கட்டினவளும் பாராள்.

5-கையாளாத ஆயுதம் துருப்பிடிக்கும்.

6-கையிலே காசு வாயிலே தோசை.

7-கையில் உண்டானால் காதிருப்பார் ஆயிரம் பேர்.

8-கையூன்றிக் கரணம் போட வேண்டும்.

9-கையில் பிடிப்பது துளசிமாலை கக்கத்தில் இடுக்குவது கன்னக்கோல்.

10-கொடிக்குக் காய் பாரமா.

11-கொடுக்கிறவனைக் கண்டால் வாங்கிறவனுக்கு இளக்காரம்.

12-கொடுங்கோல் அரசு நெடுங்காலம் நில்லாது.

13-கொடுத்ததைக் கேட்டால் அடுத்ததாம் பகை.

14-கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளை பூச்சியா.

செல்வி நிவேதா யதீஸ்குமார்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

# தெரிந்து கொள்வோம்

## ஈபிள் கோபுரம்...

பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் இந்தக் கோபுரம் உள்ளது. இதனைச் சுற்றிலும் மிகப்பெரிய பரப்பளவில் பசும்புல் தரை அமைந்துள்ளது.. அங்கிருந்து பார்க்கும்போது ஈபிள் கோபுரம் அற்புதமாகத் தெரியும். ஒரு சராசரிக் கட்டடத்தைப்போல் 81 மடங்கு உயரம் கொண்டது. அதாவது 324 மீட்டர் உயரம் கொண்டதாகும். 1652 படிகள் உள்ளன. இந்தக் கோபுரத்தை வடிவமைத்தவர் குஸ்டவ் ஈபிள் என்ற பொறியியல் வல்லுனராவர். இவருடன் சுமார் 300 மனிதர்கள் வேலை செய்து இதனை உருவாக்கினார்கள். பிரென்சுப் புரட்சியின் நூற்றாண்டு நிறைவையொட்டி இந்தக்கோபுரம் நிறுவப்பட்டது. ஈபிள் கோபுரம் 7.000 தொன் எடை கொண்டதாம்.

எஸ் சானியா
சுண்டுக்குளி மகளீர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் எவ்வாறு சுரக்கிறது...

எமது கண்கள் எப்போதும் ஈரப்பதனாக இருக்க வேண்டும். இதற்காகக் கண்களின் மேற்பரப்பில் கண்ணீர்ச் சுரப்பிகள் உள்ளன. இந்தச் சுரப்பிகளில் சுரக்கும் நீர், நாம் இமைக்கும் போது கண்ணின் அனைத்துப் பாகங்களிலும் பரவிக் கண்ணை ஈரமாக வைக்கின்றது. அதிகளவான இன்ப, துன்பங்களுக்கு நாம் ஆளாகும்போது அல்லது வெங்காய வாசனையை நுகரும்போது இந்தக் கண்ணீர்ச் சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. இதன் காரணமாக வழக்கத்தைவிட அதிகமாக நீர் உற்பத்தியாகின்றன. இவ்வாறு உற்பத்தியாகும் நீர் இமை ஓரத்தில் தேங்கிக் கண்ணீர்த் துளிகளாக வெளியேறுகின்றபோது மூக்குத் துவாரங்கள் வழியாகவும் கண்ணீர் வரும். கண்ணக்கும் மூக்குத் துவாரத்திற்கும் தொடர்பு இருப்பதே இதற்குக் காரணமாகும். இந்தக் கண்ணீரில் கிருமி நாசிகள் இருப்பதனாலேயே கண்கள் எப்போதும் தூய்மையாக இருக்கின்றன.

செல்வி கிருபாஜினி கிருபாகரன்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

## குழந்தைகளுக்கான கொடுப்பனவு (Kinder Geld)

ஜேர்மனியில் குழந்தை பெற்றுக்கொள்ளும் பெற்றோர்களுக்கு வழங்கப்படும் அரசு நிதியுதவி அதிகளவில் உயர்த்தப்பட உள்ளதாக அரசு அதிரடியாக அறிவித்துள்ளது.

ஜேர்மன் சட்டப்படி குழந்தை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு பெற்றோருக்கும் அரசு குறிப்பிட்ட தொகையை நிதியுதவியாக வழங்கி வருகிறது.
2017-ம் ஆண்டின்படி, ஒரு குழந்தை பெற்றுக்கொள்ளும் பெற்றோருக்கு ஒவ்வொரு மாதமும் 192 யூரோ வழங்கப்படுகிறது. இந்த நிதியுதவியானது குழந்தையின் முதல் மாதம் முதல் அதற்கு 25 வயது பூர்த்தி ஆகும் வரை வழங்கப்படுகிறது.

இதேபோல், இரண்டாவது குழந்தைக்கு 192 யூரோவும், மூன்றாவது குழந்தைக்கு 198 யூரோவும், நான்காவது மற்றும் அதற்கு மேல் குழந்தை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு பெற்றோருக்கும் 223 யூரோ வழங்கப்பட்டு வருகிறது. அதாவது, 4 அல்லது அதற்கு மேல் குழந்தைகள் பெற்றுள்ள பெற்றோர்கள் ஒவ்வொரு மாதமும் 805 யூரோ நிதியுதவியாக பெற்று வருகிறார்கள்.

இந்த நிதியுதவியை தான் தற்போது உயர்த்த உள்ளதாக ஆளும்கட்சியான CDU அறிவித்துள்ளது. ஜேர்மனியில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தேர்தலில் வெற்றி பெற்றால் ஒவ்வொரு பெற்றோருக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் நிதியுதவியுடன் கூடுதலாக 25 யூரோ வழங்கப்படும் என சான்சலரான ஏஞ்சலா மெர்க்கல் அறிவித்துள்ளார்.

ஒருவேளை, இந்த நிதியுதவியை பெற்றுக்கொள்ள பெற்றோர்கள் விரும்பவில்லை என்றால் அவர்கள் செலுத்த வேண்டிய வரிப்பணத்தில் இருந்து 7,356 யூரோ தள்ளுபடி செய்யப்படும். மேலும், தேர்தலில் வெற்றி பெற்றால் இந்த சலுகையை 8,820 யூரோவாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக ஏஞ்சலா மெர்க்கல் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# குறளும் பொருளும்

களவாமை: –

281. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

282. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வேம் எனல்.

283. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும்.

284. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

285. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

286. அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கட்
கன்றிய காத லவர்.

287. களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

288. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

# குறளும் பொருளும்: எப்பொருளையும் வஞ்சனையால்கொள்ளாமை

281. பிறரால் இகழப்படாமையை வேண்டுபவன் மற்றவரின் எப்பொருளையும் வஞ்சித்துக் கொள்ளாமல் இருக்கத் தன் மனதைக் காக்க வேண்டும்.

282. பிறரது செல்வத்தை வஞ்சனையால் பறித்துக் கொள்வோம் என்பதை மனதினால் நினைப்பதும் குற்றமாகும்.

283. வஞ்சனையால் அபகரித்துக்கொண்ட பொருள் வளர்வது போலத் தோன்றிப் பின்னர் அழிந்துவிடும்.

284. ஆசை மிகுதியால் பிறரை வஞ்சித்துப் பெறும் பொருள் பயன்தரும் பொழுது தொலையாத துன்பத்தைக் கொடுக்கும்.

285. அருளின் மேன்மை அறிந்து அதன்மேல் அன்பு கொள்பவன் பிறர் பொருளைக் கைப்பற்றக் கருதி அவரது தளர்ச்சியைப் பார்க்கும் எண்ணம் கொள்ளக்கூடாது.

286. களவினால் மிகுந்த ஆசை உடையவர் நீதியின் வழியிலே நின்று ஒழுகமாட்டார்.

287. களவு என்னும் வஞ்சனை உள்ளம் நீதியைக் கடைப்பிடிப்பவரிடம் இருக்காது.

288. நீதியை அறிந்தவர் நெஞ்சத்தில் அறம் நிற்பது போன்று களவினைக் கற்றவர் நெஞ்சில் வஞ்சனை நிற்கும்.

289. களவு அல்லாத பிறவற்றை அறியாதவர்கள் நீதியற்ற செயலைச் செய்து அழிவார்கள்.

290. களவினைச் செய்பவனின் உடலிலிருந்து உயிர் நீங்கும் அக்களவினைச் செய்யாதவருக்குத் தேவருலகு கிடைப்பது தப்பாது.

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்...



## தோல்கள்:-

பாம்பு தோலைக் கழற்றி வைத்துவிட்டுப் புறப்பட்டது. ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்த பக்கம் அது போனது. அங்கே நின்ற தனியன் ஆட்டிடம் "அதோ பார் உன்னுடையவர்கள் இருக்கும் இடத்தை நோக்கித்தான் போகின்றது. நச்சுப் பாம்பு பல் பட்டாலே போதும்" என்று கூறியது சேவல். "அப்படி ஒன்றும் நடந்துவிடாது..பாம்பு தோலைக் கழற்றிப் புதிதாய்ப் பிறந்திருக்கிறது" என்றது தனியன் ஆடு. சிறிது நேரத்தில் ஆடுகளின் அலறல் புல்வெளியை உலுக்கியது. ஓசை வந்த திசை நோக்கித் தனியன் ஆடும் சேவலும் ஓடின. அங்கே பாவம்....அப்பாவிகள் ஆடுகள் இரண்டும் பாம்புக்குப் பலியாகிச் செத்துக்கிடந்தன. சேவல் சொல்லியது....

"பல்லைக் கழற்றாத பாம்பு தோலைக் கழற்றி என்ன...வாலைக் கழற்றி என்ன"

## நட்பு:-

கடலோரத்தில் நண்டு நடந்து கொண்டிருந்தது. மணலில் பதிந்த நண்டின் கால்த்தடத்தை அலை அழித்துக்கொண்டே இருந்தது. நண்டுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு நாள் நரி கடற்கரை ஓரம் நண்டின் கால்த்தடம் இருக்கிறதா என்று தேடி அலைந்தது. வளைக்குள் இருந்து ஓரக்கண்ணால் எட்டிப் பார்த்த நண்டுக்கு அலை தன் கால்த்தடத்தை அழித்த காரணம் இப்போதுதான் தெளிவானது. அலையின் நட்பை அடிமனத்தால் போற்றியது நண்டு. தனக்குள்ளேயே அது சொல்லிக்கொண்டது..

"முன்பே காப்பான் அன்பே நட்பு"

# ஒற்றெழுத்தின் சிறப்பு..... (உண்மைத்தொகை)

01-கடைத்தெரு -வியாபாரக் கடைகள் உள்ள தெரு.
கடை தெரு -கடைசியான தெரு, கடையும் தெருவும் (உண்மைத்தொகை)

02-புகழ்ச்செல்வி -புகழுக்குரிய செல்வி.
புகழ் செல்வி -புகழும் செல்வியும்(உண்மைத்தொகை) புகழும் செல்வி:
புகழுகின்ற செல்வி, புகழ்ந்த செல்வி (வினைத்தொகை)

03-தலைக்கவசம் -தலைக்கான கவசம்.
தலை கவசம் -தலையும் கவசமும் (உண்மைத்தொகை)

04-கல்வித் தொகை -கல்விக்கான தொகை.
கல்வி தொகை -கல்வியும் தொகையும் (உண்மைத்தொகை)

05-கிளிக்கூண்டு -கிளிக்கான கூண்டு.
கிளி கூண்டு -கிளியும் கூண்டும் (உண்மைத்தொகை)

06-புளிச்சோறு - புளியால் ஆன சோறு.
புளி சோறு - புளியும் சோறும் (உண்மைத்தொகை) புளித்தசோறு,
புளிக்கின்ற சோறு, புளிக்கும்சோறு (வினைத்தொகை)

07-காக்கிச்சட்டை - காக்கி நிறத்திலான சட்டை.
காக்கி சட்டை - காக்கியும் சட்டையும் (உண்மைத்தொகை)

08-கைப்பை - கையில் உள்ள பை.
கை பை - கையும் பையும். (உண்மைத்தொகை)

09-கைக்குட்டை - கைக்கு அடக்கமான சிறியதுணி.
கை குட்டை - குட்டையான கை.

10-மோர்க்குழம்பு - மோரால் ஆன குழம்பு.
மோர் குழம்பு - மோரும் குழம்பும் (உண்மைத்தொகை) மோர்ந்த குழம்பு,
மோரும் குழம்பு, மோர்கின்ற குழம்பு (வினைத்தொகை)

# குறுக்கெழுத்துப்போட்டி-158
## (ஆடி- ஆவணி 2017)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-06 ஜேர்மனியில் நீண்டகாலமாக வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை.
12-14 குடும்பத்தில் ஒருவர்
16-18 இவர்களுக்கும் வருடத்தில் ஒருநாள் கொண்டாட்டம்.
19-21 பாடகன் எதிர்பாற்சொல்.
23-26 இசைக்கருவி ஒன்று
வ-இ
07-06 மச்சானை இப்படியும் அழைக்கலாம்.
12-10 கோவில் என்று அழைக்கலாம்
28-26 ஒரு உருவம்
33-30 பாம்பு ஒத்த சொல்
39-36 இலக்கியத்தில் ஒருவர்
46-43 இனிப்பான தின்பண்டம்
49-47 தடி ஒத்த சொல்
கீ-மே
19-05 செருப்பு ஒத்த சொல்
41-13 வடகிழக்கின் காணாமல்போன உறவுகளின் இதுக்கு முடிவே இல்லை.
44-30 ஒற்றுமை என்னும் இது இருந்தால் சாதிக்கலாம்.
46-25 இலங்கையில் வெப்பத்தின் இது தாங்கமுடியாமல் பலர் திண்டாடினர்.
மே-கீ
01-29 வடபகுதியில் வருமானம் தரும் விவசாயப் பயிர்.
04-18 பூ ஒத்த சொல்.
09-30 பாதகம் எதிர்ச்சொல்.
28-42 இந்தப் பிரதேசத்தில் இவ்வருடம் நெல்அறுவடை வீழ்ச்சி கண்டுள்ளது.
33-47 இதுதான் உலகமகாசக்தி என்று கூறுவார்கள்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# முக்கிய சில நிகழ்வுகள்.... (ஆடி - ஆவணி மாதம்)

## இலங்கை

03.07.1992-ஆனையிறவு பகுதியில் வை-8 ரக விமானத்தை விடுதலைப்புலிகள் சுட்டு வீழ்த்திய தினம்.

05.07.1987-விடுதலைப் புலிகளின் மூத்த கரும்புலி வீரன் கப்டன் மில்லர்(வல்லிபுரம்-வசந்தன்) நினைவுநாள் (1.1.1966-5.7.1987)

09.07.1995-நவாலி தேவாலயம் படுகொலை நாள் 141 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

10.07.1991-ஆனையிறவுச் சமர் விடுதலைப்புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட நாள்.

11.07.1990-கொக்காவில் இராணுவமுகாம் தாக்கியழிக்கப்பட்ட நாள்.

16.07.1990-காங்கேசன்துறை கடற்படைத்தளக் கப்பலை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்த நாள்.

23.07.1983-வரலாற்று முக்கியத்துவம் கொண்ட திருநெல்வேலியில் விடுதலைப்புலிகள் இராணுவத்தினரை தாக்கி அழித்த நாள்.

24.07.1983-யூலைக் கலவரம் ஆரம்பமாகிய நாள்.

-கட்டுநாயக்கா விமானப்படைத் தளம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் 26 வான்கலங்கள் தாக்கியழிக்கப்பட்டது.

25.07.1983-வெலிக்கடை முதற்கட்டப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டடு 35 அரசியல் கைதிகள் கொல்லப்பட்டநாள்.

26.07.1957-பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டநாள்.

27.07.1983-வெலிக்கடை சிறைச்சாலை 2வது நாள் படுகொலை 19 அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட நாள்.

29.07.1987-இந்தியப்பிரதமர் ரஜீவ்-ஜே ஆர். ஜெயவர்த்தனா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாள்.

02.08.1994-விடுதலைப்புலிகள் பலாலியில் அரச உலங்குவானூர்த்தியை தாக்கி அழித்தநாள்.

04.08.1987-விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரன் சுதுமலையில் முதன் முதல் மக்கள் முன் தோன்றி உரையாற்றி நாள்.

06.08.1978-இலங்கைக்கு முதன் முறையாக பாப்பரசர் 6ம் சின்னப்பர் விஜயம் செய்த நாள்.

12.08.1985-தமிழ் 5 இயங்கங்கள் ஒன்றுகூடி 2ம் கட்ட திம்பு பேச்சுவார்த்தை நடாத்திய நாள்.
13.08.1849-யாழ் பதில் மறைமாவட்டம் நிறுவப்பட்ட தினம்.
15.08.1977-ஜே.ஆர் அரசின் தமிழினப்படுகொலை ஆரம்பமாகிய நாள்.
18.08.1985-விடுதலைப்புலிகளின் தமிழீழ மகளிர் படை ஆரம்பநாள்.
19.08.1993-விடுதலைப்புலிகளின் தமிழீழ படைத்துறைப் பாடசாலை ஆரம்பித்தநாள்.
26.8.1993-யாழ் நீரோடையில் விடுதலைப்புலிகளால் கடற்படை படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டநாள்.

## இலங்கைப் பிரபலங்கள்.

03.07.1911-கொழும்பு-கண்டி ஆயர் கி.பஞ்ஞானி நினைவுதினம்.
06.07.1992-கோவை மகேசன் நினைவுதினம் (22.2.1938-6.7.1992)
-தவில்மேதை என்.ஆர்.சின்னராசா நினைவுதினம்(6.7.1924-6.7.1992)
08.07.1989-நடிகமணி வி.வி.வைரமுத்து நினைவுதினம் (11.2.1924-8.7.1989)
13.07.1989-இலங்கை வரலாற்றில் முதல் எதிர்கட்சித்தலைவர் தமிழரசுக்கட்சியின் தலைவர் அ.அமிர்தலிங்கம் நினைவுதினம் (1927-1989)
15.07.2008-தெல்லிப்பளை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுதினம்.
19.07.1947-சுவாமி விபுலானந்தர் அடிகள் நினைவுதினம் (27.3.1892-19.7.1947)
26.07.1857-யாழ் முதல் ஆயர் பெறாக்கின் நினைவுதினம்.
26.07 -கலையரசு சொர்ணலிங்கம் நினைவுதினம்.?????????????
30.07.1969-வாக்கிய பஞ்சாங்க மேதை இரகுநாதையர் நினைவுநாள்.
02.08.1892-தமிழ்தூது தனிநாயகம் அடிகளார் பிறந்த தினம்(இறப்பு 01.09.1980)
03.08.1892-யாழ்-கொழும்பு ஆயர் பொஞ்சின் நினைவுதினம் (1823-1892)
04.08.1908-முன்னாள் கொழும்பு மேயர் உருத்திரா பிறந்ததினம்.(1908-1960)
10.08.1790-தமிழ்-டச்சு தமிழறிஞர் பிலிப்பு நினைவுதினம் (1723-1790)
11.08.1747-கண்டி நாயக்க மன்னன் சிறீவிஜய இராஜசிங்கன் நினைவுதினம்
12.08.2005-இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நினைவுதினம்.
14.08.1979-நிதி அமைச்சர் கலாநிதி என் எம் பெரேரா நினைவுதினம்
16.08.1971-தமிழரசுகட்சி டாக்டர் நாகநாதன் நினைவுநாள் (1906-1971)
26.08.1952-உரும்பராய் தியாகி சிவகுமாரன் பிறந்ததினம்.
31.08.1879-நல்லூர் ஞானப்பிரகாசர் பிறந்ததினம் (இறப்பு 22.1.1947)

# உலகில் சில பிரபலங்கள்... (ஆடி-ஆவணி)

04.07.1934-ரேடியத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானி இரண்டு தடவைகள் நோபல்பரிசு பெற்றவரான மேரி கியூரி அம்மையார் நினைவுதினம் 07.11.1867-04.07.1934)
11.07.1966-இந்தியா முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி நினைவுதினம்.
14.07.1789-கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை பிறந்ததினம்.
20.07. -அன்னை சாரதாதேவி நினைவுதினம்.
21.07.2001-நடிகர்திலகம் சிவாஜிகணேசன் நினைவுதினம்
30.07.1433-பிரான்ஸ் மன்னன் 11ம் லூயி நினைவுதினம்.

01.08.1940-உலக சாணிய இயக்கத்தின் தந்தை பேடன் பவல் நினைவுதினம் இந்த நாள்தான் சுவீஸ்லாந்தின் தேசியதினமாகும்.
08.08.1941-இந்தியப்புகழ்பெற்ற மகாகவி ரவீந்திரநாத் தாகூர் நினைவுதினம். (பிறந்ததினம் 7.5.1861) இவர்தான் இந்திய தேசியகீதத்தை இயற்றியவர்.
12.08.1848-புகைவண்டியின் தாபகர் ஜேம்ஸ் ஸ்டீவன் நினைவுதினம்.
15.08.1769-பிரான்ஸ்நாட்டு மன்னன் நெப்போலியன் பிறந்ததினம் (5.5.1821 இறப்பு)
16.08.1884-சிறீ ராமகிஸ்ணபரமகம்சர் நினைவுதினம் (17.2.1836 பிறப்பு)
17.08.1988-பாக்கிஸ்தான் ஜனாதிபதி சியாவுல் கெக் நினைவுதினம்.
18.08.1945-இந்நிய விடுதலைவீரர் சுபாஸ் சந்திரபோஸ் நினைவுதினம் (5.5.1897)
20.08.1944-இந்தியப் பிரதமது ரஜீவ்காந்தி பிறந்ததினம்.
20.08.1937-வானொலி, கம்பி இல்லாத தந்திச் சேவையை உலகிற்கு அறிமுகப்படுத்திய விஞ்ஞானி இத்தாலி நாட்டவரான மார்க்கோனி நினைவுதினம். (24.04.1874 பிறப்பு)
21.08.1940-ரஷ்ஷியா லியோன் றொக்ஸ்கி நினைவுதினம் (1879-1940)
26.08.1910-அன்னைதிரேசா பிறந்ததினம் (1910-1997)
31.08.1997-பிரித்தானிய இளவரசி டயானா நினைவுதினம்.
31.08.1952-சிறுவர் பாடலையை கல்வியை அறிமுகப்படுத்தியவர் மரியா மொன்ரசூரி நினைவுதினம்

# கண்டுபிடிப்புக்கள்

18.07.1826-பிரான்ஸ நாட்டவரான ஜோசப் நியிபே என்பவர்தான் உலகின் முதல் நிழல்படத்தை எடுத்தார்.

19.07.1960–லேசர் கருவியை அமெரிக்க நாட்டவர் தியோடோர் மைமான் கண்டுபிடித்தார்.
21.07.1885–ஜேர்மனியரான கார்ல் பென்ஸ் என்பவர் முதன்முதல் கார் வண்டியை கண்டுபிடித்து அறிமுகப்படுத்தினார்.
28.07.1924–பிரிதானியா எட்வின் கம்பின் என்பவர் சூரிய பிரபஞ்சத்தைக் கண்டுபிடித்தார்.
31.07.1648–உலக அதிசயங்களில் ஒன்றான தாய்மகால் முகாலய அரசன் சாஜகான் தன் காதலி மும்தாசுக்காகக் கட்டினான்.

03.08.1895–பிரான்ஸ் நாட்டவரான லூமியா சகோதரர்கள் கமராவைக் கண்டுபிடித்தனர்.
05.08.1438–ஜேர்மனியரான ஜோகானஸ் குடன்போர்க் நவீன அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தார்.
13.08.1942–அமெரிகாவில் ரீசேட் அறிமுகப்படுத்தப்பட்டது.

## உலகவிவகாரம்...

05.07.0000–உலக சூழல் தினம்.
11.07.0000–உலக சனத்தொகை தினம்.
16.07.1945–உலகின் முதல் அணுக்குண்டுப் பரிசோதனை மெக்ஸிக்கோ பாலைவனத்தில் பரிசோதிக்கப்பட்டது.

06.08.1945–பென்சிலினைக் கண்டுபிடித்த அலெக்ஸாண்டர் பிளெமிங்கிற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.
06.08.1907–2ம் உலகப்போரின் போது அமெரிக்கா யப்பான் கிரோஷிமா நகர்மீது முதலாவது அணுக்குண்டு போட்டு லட்சக்கணக்கானோர் மாண்டனர்.
07.08.1913–தமிழில் முதல் திரைப்படம் தயாரிக்கப்பட்டது படம் "கீசகவதம்"
09.08.1945–அமெரிக்கா யப்பான் மீது இரண்டாவது அணுக்குண்டைப் போட்டு அழித்த நாள்.
12.08.0000–சர்வதேச இளையோர் தினம்.
14.08.1947–பாக்கிஸ்தான் நாடு உருவாகிய நாள்.
15.08.1947–இந்தியா சுதந்திரம் பெற்ற நாள்.

21.08.1860-உலகின் முதல் துரித தபால் சேவை (Express) அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.
22.08.1909-அமெரிகாவைச் சேர்ந்த பெக்கிலாண்ட் என்பவர் முதன் முதல் செயற்கை இழை பொருட்சரக்கு கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே பிளாஸ்டிக் உற்பத்திக்கு வழிகோலியது.
23.08.1896-நவீன ஒலிம்பிக் கிறீஸ்லாந்து நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது.
28.08.1954-உலகின் முதல் அணுமின் நிலையம் சோவியத் நாட்டில் நிறுவப்பட்டது.
31.08.1787-அமெரிக்காவில் முதன்முறையாக டொலர் நாணயம் அறிமுகமானது.

# பாராட்டும் கௌரவிப்பு விழாவும்

யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கமானது கடந்த காலங்களில் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டுவருவது பாராட்டுதலுக்குரிய விடையமாகும். யேர்மனியிலும் தாயகத்திலும் வாழும் எழுத்தாளர்களை கலைஞர்களை கவிஞர்களை ஊக்குவிப்பதும், நிதியுதவி புரிதலும் என நின்றுவிடாது ஆதரவற்ற சிறார்களின் மேம்பாட்டுக்காகவும் மனித நேயக்கடமைகளிலும் ஈடுபட்டுவருவது சிறப்பான விடையமாகும்.

தற்போது யேர்மனியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த எழுத்தாளர்களையும் கலைஞர்கள் கவிஞர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. அத்தோடு டென்மார்க் வாழ் மூத்த எழுத்தாளர் திரு ஜீவகுமாரன் எழுதிய "குதிரை வாகனம்" என்னும் நாவலின் அறிமுக விழாவும் அவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் டோட்முண்ட் நகரில் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்!..முழு விபரங்களும் எமது அடுத்த மண் இதழில் வெளிவரும்...

காலம்-15.10.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 14.00மணி

மேலதிக விபரங்களுக்கு.....02933-7493 0203-8073898

## பிதாவே.....

ஒரு கணப்பொழுதெனினும்
பயம் பற்றிய சிந்தனை
வந்து போகவே செய்யும்.
அர்ச்சகரைமுறைத்துப்
பார்க்கையில்,
முகச்சவரம் செய்கையில்
அந்தக் கத்திக்கு...
தொடர்ந்துப் பயணத்தில்
யாரோ ஒருத்தி
சிலிர்த்துவிட்டுப் போகையில்...
நடு வீதியில் மகிழூர்தி
முரண்டுபிடிக்கையில்...
கதவு திறந்து
காலணியைக் கழற்றுகையில்
அடுக்களையில்
கோபத்தில்
பாத்திரத்தைஉருட்டும்
மனைவியிடம்...
இன்னும் ..இன்னும்
பயம் சொல்லி வருவதில்லை..
பிதாவே!
உனது பயமும் நாம் அறிவோம்..
மன்னித்தருள்கிறோம்..
மறுபிறப்பில்
என்னைப்போலவே பிறப்பீராக...

முல்லைஅமுதன்
லண்டன்

## கவிதை....

காற்று
தன் அலகுகளால்
தலையினை
துளைத்தபடி
எதையோ தேடியது.
கிடைத்ததை சப்பித் தின்று
தூர எறிந்தது.
அவைகள் சுவரில்
ஒட்டிக்கொண்டன
என் கவிதைகளாய்.
மீதமிருந்த உடலை
என்ன செய்யலாம் என்று
தீர்மானித்த
பொழுதின் முடிவாய்
கட்டித் தொங்கவிட்டு
தற்கொலை என்றெழுதியது.
எனி
கவிதை எழுதாபொழுதுகள்
அவர்களுக்காய் விடியும்....

### குடிபோதை...

குடிக்கக் கூழில்லை
கதறும் குழந்தை
தந்தை குடிபோதையில்!...

### நீச்சல்...

மிதக்கும் பிள்ளையாரிடம்
மீன் கேட்டது
நீச்சல் தெரியுமா என்று!...

## அவலமும் ஓலமும்...

பேய்களும் ஆவிகளும் அந்தரத்தில்
அவணியில் மனித வாழ்வும்
அவலத்தில்
அவலமும் ஓலமும் உலகத்தில்
சுந்தர வாழ்வு என நம்பினோர்
வாழ்வில்
சுதந்திரம் இன்றி அடிமைகளாகி
ஆசை வழியே தினமும்
அலைந்து திரிந்து
அழிவதே நியதி
பிறந்தவர்கெல்லாம் மரணம் வரும்
அது என்று வரும் என
ஒரு நாள் தெரிய வரும்
அன்று மரணத்தை காண
நாம் இருப்பதில்லை
இறந்த பின்பும் அழியா ஆசையால்
அலைந்தே திரிவர் பேயய் பிசாசசாய்
சில மனிதர்
வாழும் போதும் பேய் போல் சிலர்
மாண்ட பின்பும் பேயாய் சிலர்
கர்ம வினையின் பயனாய்
பாவி மனிதரும்
அலையும் பேய்களும்
அவலமாய் உலகில்
அவலமாய் உலகில்

கவி மீனா -ஜேர்மனி.

(நந்தினி சீரியலை பார்த்து
கொண்டிருந்து போது
எனக்கு இப்படி ஒரு கவிதை வந்தது)

## கறையான்அரித்த கடிதம்

நேசத்தின் உணர்வுகளை
பாசத்தில் குழைத்து
வாசமலர்களாய்
எண்ணங்களின் உருவமாய்
உருப்போட்டு அனுப்பிய
என் உயிரானமடல்
புத்தகத்துள் மயிலிறகாய்
பெட்டகத்துக்குள் அணிகலனாய்
பொத்திப் வைத்து காத்தேன்
கடல்கடக்கும் தூரத்தின்
கனமான வேதனையின்
சுகமான வடிகாலாய்
நெஞ்சத்தை குளிரவைத்து
தைரியம் வளர்த்தேன்
மனங்கலங்கும் தருணங்களில்
மழைகண்ட பயிராய்
துணைநின்ற துண்டுக்கடிதம்
கயமைகொண்ட கறையானின்
கால்வயிற்றுப் பசிக்குஇரையானதோ
கரைந்தேன் துடித்தேன்
சுயமிழந்து வீழ்ந்தேன்
விஷமான கறையான்
விட்டுப்போன மீதியை
தொட்டுப் பார்த்து தேற்றுகிறேன்
மீண்டும் ஒருமுறைமீண்டுவரமுடியா
தூரம்போனதந்தையின்
மிச்சமான கடிதத் துண்டுகளை
ஒட்டுப்போட்டு சட்டத்துள் வைத்து
தொட்டணைத்து நிம்மதி கொள்கிறேன்
தந்தையின் கடைசித் தாலாட்டின்
கரைந்த நினைவுகளின்
உயிர்கொண்ட வரிகள்
கடைசித் தடயமாய் எனக்கான
கடல்கடந்த கறையான் அரித்தகடிதம்

கீத்தா பரமானந்தன் -யேர்மனி

## நாளைய நம்பிக்கைகள்...

வசந்தா ஜெகதீசன்
யேர்மனி

விடியலுலகிலே
வெற்றி விதையலே
முடியுமென்றிடும்
முனைப்பின் கதிர்களே
ஆற்றும் செயல்களின்
அத்திவாரங்கள்
வெற்றி தோல்விகள்
விளையும் நாற்றுக்கள்
வீறுகொள்வதே நம்மில் நம்பிக்கை
வேண்டும் விளைவுகள்
வானை முட்டனும்
வெளியுலகின் சாதனைக்
கதவைத் தட்டனும்
அசையா வேரென
ஆணிவேர்களும்
பட்டறிவுப்பாதையின்
பகிர்வின் உச்சமும்
நாளைய நம்பிக்கை
நாற்றை விதைக்கனும்
முடியும் என்பதே
முடிவாய்ப் பூக்கனும்
அடையும் இலக்கிலே
அசையா நம்பிக்கை
விடையாய்ப் பெற்றிட
விரைந்தகாலமும்
விதைப்பின் காலமும்
நிமிர்ந்த தூண்களாய்
எதிர்கொள் புரட்சிக்கு
ஏணியாகனும்
இலக்கின் பாதையில்
இலட்சியம் பொறிக்கனும்
நாளைய நம்பிக்கை
நாற்றை விதைத்திட
இன்றைய செதுக்கலின்
திருப்புமுனைகளே
பொறியாய்ப்பூக்கும்
புதுயுகம் நோக்கும்!....

## காலங்களின் கோலம்...

காலத்தின் கோலம் பருவங்கள்
காட்சிப்படுத்தலின் வடிவங்கள்
ஞாலத்தின் நடைமுறைக் கூறுகள்
நாளாந்த மாற்றத்தின் கதவுகள்

உருவத்தில் ஒற்றை ஆண்டொன்று
பருவத்தில் பயணிக்கும் நாளென்று
பயிர் நிலப்புரட்சியின் வடிகாலாய்
பசுமைத் தோற்றம் நிலக்கூறாய்

தருக்களின் தோற்றம் தருகின்ற
தளர்வும் பூப்பும் தனிக்கணிப்பு
உறவும் வாழ்வும் இதுபோல
உராய்ந்து போகும் பலசிறப்பு

ஞாலப்பரிதியின் நடைமுறையில்
நம்பிக்கை நகருது நமக்குள்ளே
காலத்தின் கோலம் வரைவாக்கும்
பருவத்தின் செறிவே பகுப்பேடு!....

# அவனும் இவனும்...

ப.பசுபதிராசா - யேர்மனி

அன்றாடம் கனக்கும் அரசியல் நெருக்கடிக்குள்
திண்டாடும் ஈழத்தொழிலாளர்கள் ஒரு திரிபுரம்
கொண்டாட்டங்கள் மறந்து கொடுமைகளின் அருகில் இருக்கும்
வண்டினமாய் தினம் உழைத்தும் வாயில் அன்னமில்லை என்றைக்கும்...

ஒன்றுபட்டு நின்று ஊரைக் காக்கும் தொழிலாளர்களின்
அம்பு பட்ட பழஞ்சேலையாய் அகலக்கணி விரித்து
வம்புகொண்டு இந்த நாட்டில் தும்பு தும்பாய் பிரிந்து ஒற்றுமைத்
தெம்பு இன்றி வாழ்ந்ததால் தேசம் தேய்ஞ்சுபோச்சு கரைந்து...

சிங்களத் சோதர உழைப்பாளி இராணுவச் சிப்பாயாய்
தமிழ் உழைப்பாளித் தோழனுக்கு எதிராய் எந்திரம் ஏந்த
தமிழ் உழைப்பாளி சிங்களத் தேசத்தின் தீவிரவாதியாய் சுடுகலம் தாங்க
வென்றது பணமுதலைக் கட்டமைப்புஎன்று புரியாத புதிர் இவர்களுக்கு...

கொழுத்த பணமும் தமிழ்ப் பெண்ணின் கற்பும்
அவனுக்குச் சுதியேற்றும் அவசர ஊட்டங்கள்
தெரியாத தலைவனும் துரோகப் புத்திரரும்
இவனுக்கு ஒரு திக்குத்தெரியாத காட்டின் இருள் மூட்டங்கள்...

அவன் இங்கு விழுந்தால் வீதியில் அநாதைப்பிணம்
இவன் விழுந்தால் உடைஉரிந்து மானங்கெடும்
எவன் விழுந்தால் என்ன இரு போராளிகள் உயிரைக் குடிக்கும்
முதலாளித்துவம் வென்று எம் பெரியபகை வீழ்ந்து முடியும்...

உழைக்கும் இருபக்கம் பாட்டாளிகளின் கூட்டம்
முளைக்கும் சக்தியை உடைக்கப் போடுகின்றனர் ஆட்டம்
பிழைக்கும் இவர்களுக்கு உழைப்பை உறிஞ்சவே திட்டம்
ஏழைகள் நாம் சூழ்ச்சியறியாதுவிட்டால் வாழ்வே வீழ்ந்து கெடும்...

# சர்க்கரைக் கவி....

மு.அழகிரிசாமி
திருவாரூர் -தமிழ்நாடு

உடலுழைப்பு கொஞ்சம் உடற்பயிற்சி சக்தி
இடங்கொடுக்கும் மட்டும் விடாமல் செய்
தன்னம்பிக்கை வைத்து தான்பிறர்க் கீந்துமனந்
தன்னைச் சாந்தி செய் வாய்
யோகா தியானம் இரண்டும் நல் யோகம்தான்
ஆகா இவற்றை விடாமல் கைக்கொள்
தனிமையை விட்டுவிட்டு தன்சுற்றஞ் சூழ
இனிமையாய் பேசி என்னாளும் மகிழ்
அதிகம் பொறுப்புக்கு ஆசைப்பட்டு மேலும்
புதிய பொறுப்புக்கள் வேண்டவே வேண்டாம்
தூக்கம் குறையும்கால் துக்கமே மேலோங்கி
உடல் தாக்கிடச் செய்திடாதீர்
உடலில் புண் வந்தால் உடனே மருந்தால்
இடத்தை நலம் பெறச் செய்திடுவீர்
இனிப்பு புளிப்புடன் உப்பு கொழுப்பு
பிணிதரும் என்றே என்னாளும் ஒதுக்கிடு
நெல்லரிசிச் சோற்றை நிறைய உண்ணாமல்
பல்வகை தானியங்களை உண்டிடுவீர்
கிழங்குகள் நீக்கி நல்ல கீரைகள் காய்
பழங்களை தேவைக்குச் சேர் நலம்பெறுவாய் நீ!...


வாசம்!......
மரணத்தின் பின்பும்
சமையல் அறை எங்கும்
அம்மாவின் வாசம்!...

தாரம்!.....
பெண் குழந்தைக்கு
கள்ளிப்பால் தந்தவருக்கு
இரண்டு தாரம்!....

பூசை!....
மகன் சிறப்புப் பூசை
அம்பாளுக்குப் பட்டுச்சேலை
தாயோ பிச்சைத் தட்டோடு!...

ஆலமரம்!...
விழுதுகளால் கைவிடப்பட்ட
ஆலமரங்கள்தான்
முதியோர் இல்லங்கள்!...

# 134வது மண் சஞ்சிகைக்கான அட்டைப்படக் கவிதை



நீளும் காலநதியின் நகர்வினால் நிகழ்த்துகின்ற ஓடங்கள்
நிதர்சனங்களையே நிழல்களாய் நிருபிக்கின்ற நிஜங்கள்
வாளும் கிரீடமும் குடையுமிலா வசீகர இராஜ்ஜியங்கள்
வரலாற்றினைப் பதிவாக்கிடும் வள்ளலின் படையல்கள்.

கோள்களும் திசைகளும் குறித்துக்காட்டிடாத குவியங்கள்
குறிக்கோளே கலைவடிவாய் கொடிகள் நடும் சாமர்த்தியங்கள்
ஏழுவகை சுரங்களாய் என்றைக்கும் ஒலிக்கும் இராகங்கள்
ஏந்நாளும் இலக்கியங்களை இசைத்திடுகின்ற தென்றல்கள்

சூழும் வாய்ப்புக்களை சுவைகளாக்கும் அநுபக்குவியல்கள்
சொடுக்குகின்ற தருணங்களில் சுவைக்கத்தரும் விருந்துகள்
தாளும் ஏடுகளும் தமிழிலேத் தந்திடாத ஞானக்குவியல்கள்
தசைநரம்பிலும் நாணேற்றி தருகின்ற கலைப் பொக்கிஷங்கள்

நாளும் பொழுதுகளும் நடிப்புகளும் வாழ்வின் அர்ப்பணிப்பும்
நடமாடும் அரங்கமாக நனைத்திடுகின்ற அமுதமழை தாறலாம்.
வாழுகின்ற காலங்களிலே வாழ்த்துவதுவே பொருத்தமாகும்
வரலாற்றுப் பதிவுகளாய் வடித்திடுதல் எமக்கு நியாயமாகும்.

அம்பலவன்புவனேந்திரன்.

# வலிகள் நீக்கிட வளியோ தெரியவில்லை.........

காலவெள்ளம் கரைகடந்தும் கரையாதது ஆழியின் வடுக்களாகும்
கதறல்களும் ஒப்பாரிகளும் காதினுள் கன்றிப்போய் நிதம்வலிக்கும்
ஞாலமெல்லாம் பார்த்திருந்த நம் துயரிருளினைத் தடுக்குமென்று
நம்பியிருந்த எண்ணங்களெல்லாம் நெரிஞ்சி முள்ளாய்த்தைக்கும்...

ஓலங்கள் ஓய்ந்துவிட்டாலும் உடலங்கள் சாய்ந்து வீழ்ந்திட்டாலும்
ஊயிர்கருகி உலர்ந்த வாசனை உள்மனதை உருக்கிக்கருக்கும்
ஏலங்கள் போட்டு இறைமையினை ஏமாற்றியே வாக்குறுதியாக்கும்
இலங்கைத்தீவிலோ தமிழினத்தின் எதிர்பார்ப்பு இன்றளவும் நீளும்...

நீலம்சுமந்த வங்கக்கடலும் நீண்டு விரிந்த எமது வான்வெளியும்
நிகழ்ந்தன எல்லாவற்றையும் நிஜமாகவே நீதியாய் உதிர்த்திடும்
கோலங்கள் போடும் மலர்கள் குவிந்து விரிந்த மலைகளெல்லாம்
குடைந்த சோகம் கேட்டு குமுறியழுது எம்கதையினை உரைக்கும்..

பாலமாய் நாங்கள் நின்று பகையினைப்போக்கும் செயற்பாட்டினில்
பணியாற்றுவோம் என்றவர்குரல் படரும் இருளில் மறைந்துபோகும்
ஆலத்தை மறைத்த அரவமாய் ஆளுகின்ற அரசுகள் மாறிப்போகும்
அழிப்பதொன்றே இலக்கெனக்கொண்டு அரியணைகள் பலமாறும்..

மூலத்தைத் திரித்து எம் முன்னோரின் வரலாற்றையும் மறைக்கும்
முதிசத்தை எந்நாளும் சுரண்டியே முன்னேற இனவாதம் முயலும்
நூலக எரிப்புடன் தொடங்கி நூதனக்கொலைகளுடன் பயிற்சியும்
நுட்பத்தினைப் படையினருக்கும் நுணுக்கமாய் நித்தியமும் புகட்டும்..

ஜாலம் செய்யும் அரசும் யௌவனத்தின் நாடியினைப் பிடித்துப்பார்க்கும்
யாவும் பொய்யெனவே நாடகமாடி ஜனங்களை மேலும் நம்பவைக்கும்
சாலத்தை நிகழ்த்துவதாய் சத்தியவானாய் வாக்குறுதியுடன் நடிக்கும்
சாக்காட்டுக்கான இலக்கினுக்கு சாமர்த்தியமாய் காய்களை நகர்த்தும்...

அம்பலவன்புவனேந்திரன்

# ஹைக்கூ பற்றிய கண்ணோட்டம்....

கௌசி – யேர்மனி

கவிதை கட்டுரையல்ல. கவிஞன் உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடு. அவன் பேசுகின்ற விடயங்களில் பல மௌனங்கள் மறைந்திருக்கும். அதனை தேடிப்பெறுபவனே சிறந்த கவிதா ரசிகன். மறைவாக ஆழமாகச் சிற விடயங்கள் சிறப்பாகச் சொல்லப்படும் துளிர்ப்பாவே ஹைக்கூக் கவிதையாகின்றது.

தமிழைப் போன்று சங்கம் வைத்து இலக்கியம் வளர்த்த ஜப்பானிய புகழ்பெற்ற கவிதை வடிவமே ஹைக்கூவாகும். 1603 தொடக்கம் 1863 வரையுள்ள காலப்பகுதியில் சீன ஜப்பான் மொழிகளின் கலவையாக உருப்பெற்ற இக்கவிதை வடிவத்தினைப் பல நாடுகள் பின்பற்றி வந்தன. அவ்வகையிலேயே இன்று தமிழ்மொழியிலும் ஹைக்கூக் கவிதைகள் எழுதப்படுகின்றன. முதன் முதலில் 16.10.1916 அன்று வெளிவந்த சுதேசமித்திரன் என்னும் பத்திரிகையில் மகாகவி பாரதியார் ஜப்பானிய கவிதைகள் என்னும் தலைப்பிலே சில ஜப்பானிய ஹைக்கூக்களை மொழிபெயர்த்து எழுதியிருந்தார். இதுவே தமிழில் ஹைக்கூக்களின் புதுவரவாக அமைகின்றது. இவர் ஹைக்கூக் கவிதைகளை அறிமுகப்படுத்தும்போது இதன் பெயரைக் ஹொக்கு என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் ஹைக்கூத் தொகுப்பு நூலாக வெளிவந்த முதல்நூல் அமுதபாரதியின் "புள்ளிப்பூக்கள்" என்னும் நூலேயாகும். இது ஆவணி 1984 இல் வெளியானது. அதனைத் தொடர்ந்து 1984 கார்த்திகை மாதம் அறிவுமதி அவர்கள் "புல்லின் நுனியில் பனித்துளி" என்னும் நூலை வெளியிட்டார். நிர்மலா சுரேஷ் என்னும் பெண்கவிஞர் ஹைக்கூ பற்றிய ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்துள்ளார். கவிஞர் கு.தேன்மொழி அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட "துளிப்பாக்களில் அழகியலும் சமுதாயமும்" என்னும் பெயரில் வெளியிடப்பட்ட ஆய்வுநூலும் ஹைக்கூ பற்றிய தெளிவையும் சிறப்பையும் எடுத்துக்காட்டுகின்றது. ஜப்பானிய வாகா, சோகா, செடோகா, கட்டவ்டா, தான்கா, ரெங்கா, ஹொக்கு முதலிய இலக்கிய வடிவங்களை இனங்காட்டித் தமிழிலே ஹைக்கூ எப்படி கையாளப்படுகின்றது என் விளக்கியுள்ளன.

ஹைக்கூ கவிதையானது ஐந்து, ஏழு, ஐந்து என முறையே 17 அசைகளைக் கொண்டு 3 அடிகளில் எழுதப்படும். காற்றின் கைகள் என்னும் அமுதபாரதியின் நூலிலே இவ் அசை அமைப்புடன் கூடிய ஹைக்கூக் கவிதைகளைக் காணலாம். ஆனால் தற்போது அவ் இலக்கணம் கண்டுகொள்ளப்படுவதில்லை. ஒரேயொரு காட்சியையோ பொருளையோ உணர்வையோ வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இதன் ஆரம்பப் பெயர் ஜப்பானியரால் ஹொக்கு என்று வழங்கப்பட்டது. ஹைகை என்று திரிந்து அதாவது தமிழில்க ஐகை என்று திரிந்து ஐக்கூவாயிற்று. அதாவது அணுத்தூசி போன்ற சிறிதானது என்னும் பொருள் கொண்டது. ஐ என்றால் கடுகு கூ என்றால் உலகம் கடுகு போன்ற சிறிய வடிவில் உலகளாவிய கருத்துக்களை செறிவாகத் தரும் கவிதை என்னும் பொருளிலும் வழங்கப்படுகின்றது.

வரிகளால் பெருந்தூண் எழுப்பாமல் குறைவான சொற்களால் அழகுணர்ச்சியை வெளிபடுத்த ஹைக்கூ கைகொடுக்கின்றது. வெளிப்படையாக எல்லாவற்றையும் கூறாமல் வாசகன் சிந்தனைக்கு இடம் கொடுக்கவேண்டும். ஹைக்கூக் கவிதைக்குத் தலைப்புத் தேவையில்லை. கவிதையின் அழகை இறுதி வரிகளில் அடக்க வேண்டும். இறுதி அடியில் முழக்கவிதையினதும் வெளிப்பாடும், உணர்வும் பளிச்சென்று புலப்படும். இது மின்மினிப்பா, குறும்பா, வாமன் கவிதை, அணில்வரிக்கவிதை, துளிக்கவிதை, சிந்தர், கரந்தடி, விடுநிலைப்பா என்னும் பெயர்களினால் தமிழில் அழைக்கப்படுகின்றது.

அப்துல் ரகுமான் அவர்கள் பல ஹைக்கூக் கவிதைகளை மொழிபெயர்த்தார். எம்மைச் சுற்றி ஓராயிரம் ஹைக்கூக்கள் ஆழமாக நோக்கினால் அத்தனையும் அற்புதங்கள். சென் தத்துவத்தைப் பரப்புவதற்குக் ஹைக்கூக் கவிதைகள் மிகவும் உதவின.
அமுதபாரதியின ஹைக்கூ
குளமொன்றை வெட்டு
குறைவின்றி நீர் நிரப்பு
குளிக்க வரும் நிலவு
தற்போது வரிகளுக்கு முக்கியத்துவத்தை அளித்து அசை பற்றிய அக்கறையை விடுத்து ஹைக்கூக்கள் எழுதப்படுகின்றன. தற்போது இணையங்களில் பல சிறப்பான ஹைக்கூக்கள் வெளிவருகின்றன.
பத்துமலைத் தைப்பூசம்
உண்டியலைப் பார்த்தபடி
ஏழைச்சிறுமி

வாளியைக் காலி செய்ததும்
வானத்துக்குப் போனது நிலவு.

தற்போது வரிகளும் அசைகளும் இழந்த நிலையில் ஹைக்கூ என்ற பெயரில் வெளிவரும் அற்புதமான ஹைக்கூக்களும் உண்டு
அழகான பொய்களில் அன்பினைப் பெறுவதை விட உண்மையான கோபங்களை அன்பாகவே ஏற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு ஹைக்கூ தமிழில் வந்து புகுந்தது. தன் அமைப்பையும் இலக்கணத்தையும் மாற்றி புதுப்பொலிவுடன் ஹைக்கூ என்னும் பெயருடன் இணையத்தளங்களிலும் முகநூல்களிலும் வலம் வருகின்றது.

-----------------

## பள்ளிக்காலமே.....

கல்வி எனும் பெருவிளக்கு
கற்றுத்தரும் கூடமிது
துறைசார்ந்து உருவாக
தூக்கி நிமிர்த்தும் கூடமிது

ஓடி ஓடி விளையாடி
ஒருவரோடு ஒருவராக
நட்புகள் உருவாகும்
நல்நண்பர்கள் உறவாகும்

மாற்றங்கள் நிகழ்வாகும்
மறுபடியும் தேர்வாகும்
வகுப்பேற்றம் வந்துபோகும்
பிரிவுகள் பலவாகும்

என்னாளும் எதிர்வுகூறும்
ஏற்றமே விளைவாகும்
ஆரம்பம் அத்திவாரம்
பள்ளிக்காலமே படியேற்றும்

எத்துறைக்கும் முதற்புள்ளி
இங்குதான் ஆரம்பம்
கற்றலுக்கு விதையிடும்
பள்ளிக்காலமே ஏணிப்படி.

வேதிகா ஜெகதீசன்
யேர்மனி.

# நாட்டு நடப்பு - 2

கவி மீனா – யேர்மனி

இந்த நாட்டு நடப்பை சொல்வதே என் நாய் பிழப்பாய் போச்சுது! நம்ம சனம் படுகிற பாடு பார்த்த பின்பும் சும்மா இருக்க முடியலை அர்பனுக்கு பவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் என்று ஏன் அன்று பெரியோர்கள் எழுதி வைத்தார்கள் என்பது எனக்கும் இப்பதானே புரியுது. காசு இருக்கு என்பதற்க்காக தங்களுக்கு சம்பந்தம்மில் லாத பிரயோசனபடாத அல்லது அதை உபயோகிக்க தெரியாத பொருட்களை எல்லாம் வாங்கி வீட்டிலை வைப்பதில் சில பேருக்கு அலாதி பிரியம், காரணம் இந்த கொம்பு யூட்டர் (Computer) பிளட் ரிவி (Flat TV) இவைகள் கூட வைத்திருந்தால் தங்களை சனங்கள் மதிப்பார்கள் என்று வாங்கி வீட்டிலை வைப்பவர் உண்டு ஆனால் அதிலை பாருங்கோ அதை ஓண் பண்ண கூட அவர்களுக்கு தெரியாது!

ஒரு தமிழ் பொம்பிளை சொன்னா நான் உந்த கொம்புயூட்டர் பக்கமே போறதில்லை, தலை இடிக்கும் எனக்கு அதை பார்த்தாலே என்று, சிரிப்பு என்னவென்றால் அவ ஊரிலை பள்ளிகூடபப:க்கமே போனது இல்லை, மழைக்கு கூட பாடசாலை பக்கம் அவவும் அவவுடைய கணவரும் ஒதுங்கியதே இல்லை ஆனால் அவங்க வீட்டிலை அழகு பொருட்காச்சியாக ஒரு கொம்புயூட்டர் இருக்குதுங்கோ! தைக்க தெரியாவர் வீட்டிலை தையல் மெசின், கோவிலுக்கு போகாத, சாமி கும்பிடாத வேதகாரங்க வீட்டிலை கூட நடு கூடத்திலை ஆள் உயர குத்து விழக்கு அலங்கார பொருளாக காட்ச்சி தருகிறது இது எல்லாமா ஒரு மனிதருக்கு மதிப்பை தரகூடும்?

பிள்ளைகள் வந்தால்தான் ரிவியே ஓன் பண்ணலாம் என்றால் பாருங்கோ அவர்கள் நிலமையை! ரெலிபோன் அடிச்சால் அதிலை அடுத்த முனையில் இருந்து சொன்ன நம்பரை எழுத தெரியாது பாருங்கோ ஒரு பொண்ணுக்கு அதிலை போய் இருந்த என்னை கொண்டு அந்த நம்பரை எழுதி வாங்கி வைக்குறா கேட்டா தான் கண்ணாடியை தேட வேணும் என்று பொய் வேறே, உண்மை என்னவெனில் அவவுக்கு எழுத தெரியாது.

படிக்காத ஆட்களை நான் பகிடி பண்ணவில்லை அவங்க சொல்கிற பொய்யைதாங்க என்னாலே சகிக்க முடியலை, அதுகள் பொய் பேசியே நாடு கடந்து வந்ததுமல்லாது நா ட்டுக்கு ஒழுங்கா போய் வருகுதுகள் என்றால் அதுகளின்ற வல்லமையை படித்தவனுக்கு இல்லை பாருங்கோ!
பொய்க்குதாங்க காலம்
உண்மையை பேசி எனக்கு
ஊருபட்ட பிரச்சனைதானுங்க!
ஒரு நாள் நான் ஒரு ஜேர்மனிய நண்பியோடே நடந்து போகும் போது ஒரு தமிழ் பெண்மணி சந்தித்து என்னோடே கதைக்கும் போது எனது நண்பி கேட்டா இவவும் அ சூலிலை வந்தவவோ? என்று,

தமிழ் பெண்மணி தன்னை பற்றி அவ என்ன சொல்லுறா என்று கேட்க நானும் சொன்னேன் நீர் அசூலிலை வந்தனீரோ என்று அவ கேட்கிறா என்று சொல்ல, உடனே அவவுக்கு வந்திச்சு கோபம் நான் ஊரிலை இருந்த காணியை வித்து காசு எல்லாம் ஏஜன்ஸ ி காரணுக்கு கொடுத்து, ஏரோ பிளேனிலை வாரன், இவ என்ன அசூலிலை வந்ததோ என்று கேட்கிறா எல்லாருக்கும் இளகாரமா போட்டுது வெளி நாட்டு ஆட்களென்றால் என்று சொல்ல, ,எனக்கு சிரிப்பு அடக்க முடியவில்லை, விஸயம் அறிந்து ஜேர்மனிய நண்பியும் விழுந்து விழுந்து சிரிக்க தமிழ் பெண்மணி கோபிச்சுக்கொண்டு போய் விட்டா! இதை நான் இன்று வரை நினைத்து சிரிபதுண்டு காரணம் 25 வருடத்துக்கு மேலாகியும், அவவுக்கு இன்னும் தான் ஒரு வார்த்தை டொச்மொழி புரியாது ஆனாலும் இந்த நாட்டிலை காலம் ஓடுது பாருங்கோ!

இதை விட இந்த பாமர மக்கள் சொல்லுகிற பொய்க்கு அளவே இல்லாமல் போகுது தெரிந்து சொல்லுகினமா இல்லை தெரியாமல்தான் சொல்லுகினமா? எனக்கு புரியலை, இங்கு பிள்ளைகளின் அறிவுக்கு தக்கபடி தரம் பிரித்து பாடசாலைகளை வைத்தாலும் கௌப் ஸ்லவுக்கு (Hauptschule) போன பிள்ளை பத்துக்கு மேலே ஒன்றும் படிக்காட்டியும் பெற்றவர்கள் யார் கேட்டாலும் மகன் என்ஜினியர் என்று புழுகி போடுவினம் என்ஜினியர் படிப்பு படித்து பட்டம் எடுத்து வேலைக்கு போக எத்தனை வருடம் படிக்க வேணும்? அல்லது என்னத்துக்கு ஜிம்னாசியம் (Gymnasium schule) யுனிவசிற்றி (University) எல்லாம் இருக்கு என்று தெரியாமல் சொல்லுகினமா? அல்லது மற்றவர்களும் தங்களை போலே அறிவிலிகள் என்று நினைக்கிறார்களா? என்பது கூட நம் மக்களிடையே புதிராத புதிர்தானுங்க!....

இவர்களுடைய கதைகளை நம்பி ஏமாந்து போகவும் ஆட்கள் இருக்கும் போது நமக்கு காது கேட்கலை என்று இருபதுதான் மேலோ? முழு பூசனிகாயை சோற்றிலை புதைப்பது என்றால் அது நம்ம சில புலம் பெயர் மக்களால்தான் முடியும் தங்கள் பிள்ளைகளை திருத்தாமல் அவர்கள் செய்கிற தப்பு தண்டாக்களை மறைப்பதிலும் பூசி மெழுகி மெருகு ஏத்துவதிலும் கை வந்த கலை பாருங்கோ சில பேருக்கு!

ஒரு பிள்ளை ஒருத்தனை விரும்பி அவனோடே கூட திரிந்து போட்டு, பிறகு வேறே ஒருத்தனை கல்லாணம் பண்ணி 8 வருடம் கூட இருந்து போட்டு, அடிபட்டுக்கொண்டு வீட்டை வர தாய் சொல்லுறா அந்த பிள்ளை இன்னும் கன்னி கழியாமலே இருக்குது, அவன் ஆம்பிளை இல்லை என்று தாறுமாற அந்தப் பொடியனைதான் திட்டுறாங்கள், அப்போ 8 வருடமா அந்த ஆம்பிளை இல்லாதவனோடு எதுக்கு இருக்க வேணும்? என்று கேட்கிறன், மலடி என்று தன் பிள்ளையை குறை கூறாமல் அடுத்தவன் பிள்ளையை குறை கூறும் உலகம் இதுதானுங்க!

இப்ப அடுத்த கல்யாணத்துக்கு ரெடியாகி விட்டார்கள் இது எல்லாம் நம்ம பண்படா? இவர்கள் போதா குறைக்கு கையிலை பைபிளோடே அலைகிற கூட்டமுங்க! இப்படி சொல்ல சொல்ல நிறைய இருக்கு, மிச்சம் இன்னுமொரு நாளைக்கு சொல்லுறனுங்க! பொய் பேசுகிற வாய்க்கு பொரி கிடைக்காது என்று சொல்வார்கள் இங்கை பொய் பேசுகிற வாய்க்கு நல்ல மட்டன் பிரியாணியே கிடைக்குது என்றால் உலகம் போற போக்கை பாரு தங்கம தில்லலே டிங்கிரி டிங்காலே மீனாட்ச்சி டிங்கிரி டிங்காலே!.

----------

மரியாதை!...

மின்சாரம் போனதால்
சம்சாரம் சிணுங்கினாள்
அம்மிக்கு மரியாதை!..

சத்தம்!....

மிக்ஸி சத்தத்தில்
காணாமல் போனது
உரலின் சத்தம்!...

# சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 3

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-92

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 153

# இப்படியும் நடக்குது இங்க!....

-மதவடி மயிலர்-

வணக்கம்!... எல்லோருக்கும் வணக்கம்!...

என்ன இவர் வணக்கத்தோட வாறார் என்று யோசிக்க வேண்டாம். நான்தான் மதவடி மயிலர். என்ன எல்லாரும் சுகமாய் இருக்கிறியளே..இருப்பியள் என்றுதான் நம்புறன் பாருங்கோ. இப்ப ஐரோப்பாவில் வெய்யிலும் கொழுத்துது. வெய்யிலும் தாங்க முடியாது குளிரும் தாங்கமுடியாது என்றால் அப்ப எங்கபோய் வாழுறது.

முதல் வெள்ளிவிழாக்கண்ட மண் சஞ்சிரிகையை வாழ்த்திக்கொண்டு. இந்த ஆசிரியர்த்தம்பி என்னைக் கனகாலம் திரத்திக்கொண்டு திரிந்தவன். வேறொன்றுக்குமில்லை.. என்னட்டைக் கிடக்கிற விசயங்களை ஊர் உலகத்துக்குத் தெரியப்படுத்தினால் ஒரு சிலராவது நன்மை அடைவார்கள் என்ற நோக்கம்தான். ஆசிரியரின் ஆக்கினை ஒருபக்கம், நானும் இந்தப் உலகத்தில இன்னும் எவ்வளவு காலம் வாழப்போறன் பாருங்கோ!..இதற்கிடையில் எல்லாத்தையும் கொட்டித் தீர்த்துவிட்டால் போகிற வழிக்குப் புண்ணியம்தானே. ஏனென்றால் இங்கு இப்ப நம்மட ஆட்கள் ஐம்பது அறுபதுகளில போகினம். எனக்கும் கொஞ்சம் பயம்தான்...

முதன் முதலாக நான் உங்களைச் சந்திக்கும்போது மதவடி மயிலனைப்பற்றியும் கொஞ்சம் சொல்லத்தானே வேணும்...ஆனால் என்னைச் சிலருக்குத்தான் தெரியும். சில தெரிந்ததுகள்கூட என்னைத்தெரியாதவன் என்று சொல்லிக்கொண்டு போனதும் என் காதில் விழுந்தது உண்மைபாருங்கோ.. சரி..சரி.. நான் ஊரில் வாழ்ந்தபோது மதவடியில்தான் குந்தி இருப்பேன். மதவில் இருந்து தண்ணீர் வழிந்து ஓடுவதைப்பார்த்து ரசிப்பது மட்டுமல்ல, தெருவால வாறவையள் போறவையளை இடைமறித்துப் புதினம் கிண்டிப் பேச்சு வேண்டிய அனுபவமும் எனக்கு உண்டு பாருங்கோ!.. ஊர்ப்புதினங்களைக் கிண்டிப் பலருடன் பலதையும் பத்தையும் நோண்டி எடுத்துச் சிலரைக் கொழுவலிலும் மாட்டிவிட்டு வேடிக்கை பார்த்தனான் பாருங்கோ!..இதனால இவன் ஒரு கொழுவல்காரன்: விசரன், பேயன், கெட்டவன் என்று யாரும் எண்ணவேண்டாம்.

கொழுவலிலும் விசயம் இருக்கு பாருங்கோ.. நியாயம் பிறக்கும், அறிவு வளரும் சிந்தனை தூண்டப்படும், சரியான நேர்வழி கிடைக்கும், நியாயமும் கிடைக்கும், மனம்மாறும், சண்டை சச்சரவு தணியும். இதனால மதவடி மயிலனுக்கு ஊரில நல்ல மரியாதை மட்டுமல்ல. எப்போதும் ஒரு கூட்டம் பின்னாலதான். வடையும் தேநீரும் ஓசியில கிடைக்கும். தண்ணியடி சிகரட்,சீட்டாட்டம் சினிமா என அப்ப ஒரு பொற்காலம்தான்.. மதவடி மயிலனைப்பற்றிக் கொஞ்சம் சொல்லத்தானே வேணும்.

மயிலன் என்றவுடன்மயிலங்காடுதான் (சுன்னாகத்திலுள்ள ஒரு சிறிய ஊர்) இவன்ர ஊர் என்று யோசிக்காதையுங்கோ. வடபகுதியில் ஒரு ஊர்தான். என்னட்டை கொஞ்சம் கூடாத பழக்கமும் இருக்குது பாருங்கோ..ஆனால் மற்றவைக்கு நான் இடைஞ்சல் செய்தது கிடையாது. அது என்னவெண்டால் தண்ணியடிக்கிறதும் கண்டதெல்லாத்தையும் வாயுக்க போடுறது. கொஞ்சம் வண்டி அவ்வளவுதான்.வேறு ஒண்டுமில்லை. இதனால மயிலன் கெட்டவன் என்று எண்ணாதையுங்கோ!.. நல்லவன் என்று எண்ணி எனக்குப் பொன்னாடை போடவும் யோசிக்காதையுங்கோ!.. தண்ணியடிப்பவங்களெல்லாம் நல்லவங்களுமல்ல... கெட்டவங்களுமல்ல.. தண்ணியடிக்காதவங்களும் எல்லாரும் நல்லவங்களுமல்ல... கெட்டவங்களுமல்ல.. என்பதைப் புரிந்து கொள்ளுவியள் என்று நினைக்கிறன்.. ..அப்ப சரிதானே அளவானவையள் தொப்பியைப் போடுங்கோ!...

எனி விசயத்துக்குவருகிறேன்!...இப்ப நான் வெளிநாட்டுக்கு வந்துவெள்ளி விழா கொண்டாடிவிட்டேன். அதாவது இங்கு கொண்டாட்டம் என்றால்ஏன்!.. எதற்கு!...எப்படி!...எங்கே!..யார்! யாருக்கு என்ற விவஸ்தையே இல்லாமல் கொண்டாடுவதற்காகவே கொண்டாட்டம் வைத்துவேடிக்கை காட்டினம்.பட்டாசு கொழுத்த அனுமதி கிடைத்தால் அதுவும் நாலாபக்கமும் கொழுத்தி எறிந்து வேடிக்கை பார்ப்பினம் நம்மட ஆட்கள். உது கிடக்கட்டும் நான் இந்த நாட்டில கனகாலம்என்றபடியால பலருடன் பேசி, கதைத்து, அறிந்திருக்கிறன். கண்டிருக்கிறன். இப்படிப்பட்டவர்களிடம் பலநல்ல கூடாத விசயங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்திருக்கிறன். இப்படிப்பட்டவர்களிடம் பெற்ற பல அனுபவங்களில் சிலவற்றை உங்களோடு கொஞ்சம் பேசி எனது மனதை வெறுமையாக்கலாம் என்று நினைக்க முன்னுக்குப்பின் பல விடையங்கள் கிடக்குது பாருங்கோ!..

வாசித்துவிட்டுச் சிலர் கோபப்படலாம். சிலர் சந்தோசப்படலாம். சிலர் சிந்திக்கலாம். அல்லது மதவடி மயிலன் முட்டாள் என்றும் மண்டைக்குள் ஒன்றும் இல்லாதவன் என்றும் நினைக்கலாம். ஆனால் கல்லாலை எறியமாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். எறிந்தாலும் எனக்குப்படாது என்பதும் எனக்குப் புரியும்.

எனி விசயத்துக்கு வருமுன் என்ர அனுபவங்களை உங்களுக்குத் தெரியப்படுத்தி நான் புகழடையலாம் என்று ஒரு துளிகூட எண்ணவில்லை. ஏதோ சிலது என்னட்டைக் கிடக்கிறதை உங்களோடு பகிரலாம் என இந்த மயிலன் எண்ணுகிறான் அவ்வளவுதான். இதை எடுத்துக் கொள்வதும் எடுக்காமல் விடுவதும் உங்களைப் பொறுத்தது. என்னைத் திட்டித் தீர்த்தாலும் சில விடையங்களை நான் சாவதற்கு முன் கொண்டு வருவேன். இதற்கு மண் சஞ்சிகைத் தம்பி இடம்தருவான் என நம்புகிறேன். தவறினால் நான் மேடையில் பேசுவதும் எழுதுவதாலும் ஒரு சதத்திற்கும் மதிப்பில்லாமல் போய்விடும் என நான் நம்புகிறேன்.

புலம்பெயர் தேசங்களில் இன்று பலர் வெள்ளிவிழாவை (25) கண்டு வாழ்கிறார்கள். (அரசாங்க உதவிப்பணம்) சோல் மணியில் வாழ்ந்த பலர் இன்று ஓகோ என்றுதான் வாழ்கிறார்கள். இருந்தாலும் பலர் தமது கடின உழைப்பால் உயர்ந்து இன்று சொந்தவீடு, காணி, கார், கடை, சொத்து, பணம், புகழ் எனப்பெருக்கி விட்டனர். வாழ்வு செழித்துவிட்டது, வளங்கள் பெருகிவிட்டது. தலைமுறைகள் படர்ந்துவிட்டன. ஆனால் அறிவும் ஆற்றலும் சிந்தனையும் மனிதநேயமும் வளரவில்லை. குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓடுவதுபோல்தான் சிலரின் செயற்பாடுகள் இன்றும் மனம் மாறாமல் கறைபடிந்து கிடப்பது வேதனைதான். உலகம் எங்கேயோ போட்டுது பாருங்கோ ஆனால் நம்மவர்கள் பலர் இன்றும் சாதி, சமயம், பிரதேசம், நிறம், பணம், எனப்பிரித்துப் பார்த்து வாழ்ந்துகொண்டிருப்பதுதான் வெட்கக்கேடான விடையமாகும். இன்னும் கேவலம் இங்கு வளரும் தலைமுறைக்கும் பாடம்சொல்லிக்கொடுத்து நச்சு விதைகளை விதைப்பதில் நம்மட ஆட்கள் பெரும் கில்லாடிகள்தான்.

இந்த நாட்டில நடந்த சம்பவத்தை மயிலன் மதவில் இருந்து புதினம் பார்த்து அறியவில்லை. நேரடியாகக் கண்டுகொண்டேன்... கண்டுகொண்டேன்... இது திரைப்படமல்ல...உண்மைச் சம்பவம்... ஆசைக்கு ஒன்று ஆத்திக்கு ஒன்று

என்று இப்போ நம்மவர்களுக்கும் இலக்காகப் போய்விட்டது. முந்திய காலத்தில் பத்துப் பன்னிரண்டைப் பெற்ற அம்மாக்கள் அலட்டாமல் திரிய...இப்ப ஒன்றைப் பெத்துப்போட்டு ஒப்பாரி வைப்போர் தொகை பெருகிவிட்டது. இது வேறுவிடையம் அதைவிடுவோம். இப்ப இங்க ஆசைக்கு ஒன்று ஆத்திக்கு ஒன்று என இரண்டும் இங்குதான் பிறந்தன. வளர்ந்து படித்து பட்டம்பெற்று, தொழில் செய்து, கலியாணம் என்று வந்ததும் மகனுக்கும் தாய் தந்தையருக்குமிடையே பூகம்பம் வெடித்தது. தமிழர்களின் சாதி, சமயம் வித்தியாசம் என வீட்டுக்காரர் ஆணி அடித்து அறைந்தது போல மறுத்துவிட்டனர். ஏன் அவர்களின் அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என எல்லாரும் மறுத்ததுகள்!..

காதலித்த பொடியனும் பெட்டையும் சும்மா விடுங்களா!.. அதுகள் படித்ததுகள் பண்பாடனதுகள் பலதும் பத்தும் தெரிந்ததுகள். சாதி சமயம் பிரதேசம் என மூளைச்சலவை செய்த பிள்ளைகளில்லைத்தானே இந்த இளசுகள் தாய் தந்தை உறவுகளை உதறி விட்டுத் திருமணத்தை தெரிந்தவர்கள் நண்பர்களோடு சிறப்பாக நடாத்தி முடித்தார்கள். எல்லாரும் மனிதர் என்றீர்கள், எல்லோரும் தமிழர் என்கிறீர்கள் இது பேச்சுக்கும் எழுத்துக்கும்தான்... செயலளவில் நடைமுறையில் இவர்கள் சேறுகள்தான் இல்லை வேறுபாடுதான். இப்போது தம்பதிகள் தேன்நிலவைக் களித்துக் காலம் ஓட ஒரு குழந்தைக்கும் பெற்றோர் ஆகிவிட்டனர். ஆனால் பெடியனின் பெற்றோர் உறவுகள் எதுவித தொடர்பும் இல்லாமல் வாழ்கிறார்கள். அந்த அளவுக்குப் புலம்பெயர் நாடுகளிலும் தமிழனின் சாதிவெறி நிலைகொண்டிருப்பது நீறுபூர்த்த நெருப்பாகத்தான் இந்தச் சாதிசமய வேறுபாடுகள் காணப்படுவது வெட்கக்கேடான விடையமாகும்.

இந்தப் பெற்றோர்களைப்போல் பல ஆயிரம் பெற்றோர்கள் (புலன்) புலம்பெயர் தேசங்களில் மட்டுமல்ல நம் தாயகத்திலும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். வாழப்போவது சிறிதுகாலம். அதற்கிடையில் நம்மிடையேஎத்தனை வேறுபாடுகள். கட்டையில போனாலும் இந்த வேறு பாடுகளைச் சுமந்துகொண்டுதான் போவார்களோ!.. விரும்பிய இரு மனங்களைஅழித்தொழிக்க விரும்பும் இவர்களைப் போன்றவர்களை இந்த மயிலன் சும்மா விடமாட்டான். திருந்தாத மனங்கள் திருந்தியே ஆகவேண்டும். மீண்டும் அடுத்தபகுதியில் சந்திக்கும்வரை உங்கள் மதவடி மயிலன்... அப்ப வரட்டே!...மீண்டும் வருவேன்!...

# பலதும் பத்தும்....

-குற்றம் புரிந்தோருக்கு மரணதண்டனை வழங்கும் நாடுகளில் அமெரிக்காவும் ஒன்றாகும். 1976 - 2016 காலப்பகுதியான 40 வருடங்களில் அமெரிக்காவில் மின் அழுத்தம் செலுத்தி சுமார் 1.500 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாம்.

-உலகத்திலே மிக அதிகமான புத்தகங்களைக்கொண்ட நூலகமாக அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் நகரில் அமைந்துள்ள நூலகம் விளங்குகின்றது. இங்கு சுமார் 38 மில்லியன் புத்தகங்கள் இருக்கின்றனவாம்.

-உலகத்திலேயே மிகச்சிறிய புத்தகம் ஜேர்மனியிலுள்ளது. இந்தப்புத்தகத்தின் உயரம் 2.9 செ.மீ, அகலம் 2.4 செ.மீட்டராகும். இப்புத்தகத்தின் பெயர் ""Bilder-ABC"" என்பதாகும்.

-அரபு நாடான டுபாய் ஒரு சிறிய நாடாகும். இங்கு 2 மில்லியன் சனத்தொகையாகும். 85 வீதமானவர்கள் தலைநகரில்தான் வாழ்கிறார்கள். எண்ணெய் வளங்கொண்ட மிகவும் வசதிபடைத்த இந்த நாட்டில் ஐந்துபேருக்கு ஒருவர் நீரழிவு நோயாளியாகக் காணப்படுகிறார்களாம். இந்த நாட்டில்தான் உலகின் மிக உயர்ந்த கட்டிடமும் அமைந்துள்ளது.

-பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரின் சனத்தொகை சுமார் 2.24 மில்லியன்களாகும். இதில் 20 வீதமானோர் வெளிநாட்டவராவர். 9வீதமான மக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்களாம்.

-தற்போது உலகமெல்லாம் சுமார் 50 மில்லியன் மக்கள் பசி பட்டினியை எதிர்கொண்டுள்ளனர். எந்தியோப்பியா, சோமாலியா, சூடான், எறித்திரியா, மாலாவி, மொசாம்பிக், சிம்பாவே, சம்பியா, மடகஸ்கார், போஸ்வானா, அங்கோலா போன்ற நாடுகளில் மரணங்கள் அதிகரித்து வருவதாக ஐக்கியநாடுகள் சபையின் அகதிகள் பிரிவு அறிவித்துள்ளது.

-உலகம் பூராவும் தற்போது சுமார் 150 மில்லியன் மக்கள் மூக்குக்கண்ணாடி இல்லாமல் அவதிப்படுகிறார்கள் எனவும் இதனால் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் பாதிப்படைவதாக உலக சுகாதார தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

-மனிதர் சுகதேகியாக வாழ தடுப்பு ஊசி என்பது எவ்வளவு முக்கியமானது. உலகம் முழுவதும் கடந்த ஆண்டில் இந்த ஊசியை உரிய நேரத்தில் போடத்தவறியவர்கள் சுமார் 2 மில்லியன் மக்கள் இறந்திருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

-மனிதரின் செயற்பாட்டால் வாழும் பூமி நாளுக்குநாள் அசுத்தமாகிவருகின்றது. இதனால் நாம் சுவாசிக்கும் காற்றும் அசுத்தமாகியுள்ளது. இதனால் சென்ற

ஆண்டில் சுமார் 4 மில்லியன் மக்கள் அசுத்தக்காற்றைச் சுவாசித்தபடியால் இறந்திருக்கிறார்கள் என ஐக்கியநாடுகள் சபையின் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

-மலேரியா நோய் இன்று உலகமெல்லாம் ஒரு ஆட்கொல்லி நோயாகவே கருதப்படுகின்றது. 21ம் நூற்றாண்டின் மனிதப்பேரழிவை ஏற்படுத்திவரும் மிகப்பெரிய நோயான இந்த நோய் 128 நாடுகளில் காணப்படுகின்றது. சுமார் 400 மில்லியன் மக்கள் இதனால் பாதிப்படைந்துள்ளனர். ஆபிரிக்கா, ஆசியா, தென்னமெரிக்கா கண்ட நாடுகளின் மக்களே அதிகமாகப் பாதிப்படைந்திருப்பதாக உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

-உலகின் பிரதான கடல்வழிப்பாதையான பனாமாக் கால்வாய் திறக்கப்பட்டு 100 வருடங்கள் தாண்டிவிட்டது. 82 கிலோமீட்டர் நீளம்கொண்ட இப்பாதையை திறப்பதற்கு சுமார் 75.000 பேர் வேலை செய்தனராம். 55மீட்டர் அகலம் 18 மீட்டர் ஆழம் 82 கி.மீ நீளம்கொண்ட இப்பாதை 14.04.1914ம் ஆண்டு திறக்கப்பட்டது. 63 கோடி டொலர் செலவில் அமைக்கப்பட்டது. இப்பாதையைத் திறக்க 45 வருடங்கள் தொழிலாளர்கள் வேலை செய்துள்ளனர். அப்போது மலேரியா, மஞ்சள் காய்ச்சல், கொலரா போன்ற நோய்களால் சுமார் 10.000 பேர் இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. பனாமாக் கால்வாய் திறக்கப்பட்டதால் பல நாடுகளின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் வளர்ச்சி கண்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவிடையமாகும்.

-சீனாவில் சுமார் 400 மில்லியன் மக்கள் ஒரு நாளைக்கு அவர்களது வருமானம் 2 டொலர் மட்டும்தான். இதே வேளை சீனாவில் நூற்றுக்கும் அதிகமான கோடீஸ்வரர்களும் காணப்படுகிறார்களாம். தற்போது உலக ஏற்றுமதியில் சுமார் 25 வீதத்தை சீனாநாடு கொண்டுள்ளது. இப்படிப்பட்ட நாட்டில் தொழிலாளர்களின் வருமானம் மிகக்குறைவு என்பதை உலக தொழிலாளர் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

-பிரபல கடைகளில் நாம் குடிக்கும் ஒரு கோப்பியின் விலை 4 - 5 யூரோவும் அறவிடுகிறார்கள். இதே வேளை கோப்பி விளையும் வறிய நாடுகளில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஒரு மாதச் சம்பளம் எவ்வளவு என்று தெரியுமா?.. அதுவும் 4 - 5 யூரோதான். எப்படி இருக்கிறது உலகம். இதேவேளை உலகிலே கோப்பி அருந்துவோர் சனத்தொகை விகிதத்தில் பார்த்தால் பின்லாந்து மக்கள்தான் மிக அதிகமாக அருந்துகிறார்களாம். ஒரு வருடத்தில் ஒருவர் சராசரியாக 1.250 கப் கோப்பிகளை குடிக்கிறார்களாம். அந்த நாட்டில் குளிரும் கூட...கோப்பியும் விலை கூடத்தான்.

# பேய்களின் ஊர்வலமும் சவப்பெட்டிகளின் அரசியலும்

- கருணாகரன்-

"மே 18 – முள்ளிவாய்க்கால் நினைவு கூரல் நிகழ்வு" நடந்து முடிந்து விட்டது. ஆனால், ச னங்களின் விருப்பத்துக்கும் நம்பிக்கைக்கும் மாறாக தமிழ் அரசியல் கட்சிகள் உட்படப் பல்வேறு தரப்பினரும் இந்த நிகழ்வைத் தமது நோக்கத்துக்கு ஏற்றமாதிரி உருமாற்றிவிட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமாகாணசபையின் ஏற்பாட்டில் ஒரு இடத்தில் நினைவு கூரலைச் செய்தது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இன்னோரிடத்தில். சிவாஜிலிங்கம் அன்ட் அனந்தி குழமம் வேறோரிடத்தில். கிறிஸ்தவ மதகுருக்கள் சிலர் பிறிதோரிடத்தில். ஜனநாயகப் போராளிகள் கட்சி என்ற விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களின் தரப்பு இன்னோரிடத்தில். இதனால் ஒழுங்கமைக்கப்பட்டுக் கூர்மைப்படுத்த முடியாத வகையில் சிதைந்த நிகழ்வாக மாறியது முள்ளிவாய்க்கால் நினைவு கூரல் 2017.

இது போரினால் பாதிக்கப்பட்ட சனங்களிடம் கவலையை உண்டாக்கியுள்ளது. ஒரு நினைவு கூரல் நிகழ்வில் எதற்காக இத்தனை வேறுபாடுகளும் பிரிவுகளும்?என்று அவர்கள் கேட்கிறார்கள்.

மட்டுமல்ல, முள்ளிவாய்க்கால் இழப்புகளையும் அந்தத் துயரத்தையும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் சன மயப்படுத்தி, நினைவு கூர்வதன் மூலமாக விடுதலைக்கான பரிமாணத்தில் ஒரு புதிய பாய்ச்சலை நிகழ்த்தலாம். இங்கே ஏற்பட்ட துயரை, சனங்களின் கூட்டுத்துயராக மாற்றுவதன் மூலம் சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சியே நோக்கியும் அதனுடைய அறத்தின் முன்னும் கேள்விகளை எழுப்பக்கூடியதாக இருக்கும் என ஆய்வாளர்களும் குறிப்பிட்டு வந்தனர்.

ஆனால், இதற்கான முறையில் நிகழ்ச்சிகள் அமையவில்லை.

போர்க்காலத்திலும் தாங்கள் கைவிடப்பட்டிருந்தோம். இப்போதும் அப்படியான ஒரு நிலைதான் உருவாகியிருக்கு. ஆளாளுக்குப் போட்டி போட்டுக்கொண்டு இந்த நிகழ்ச்சியை நடத்தப்பார்க்கினம். கொல்லப்பட்டவைக்கு உண்மையில அஞ்சலி செலுத்திறதெண்டால், எல்லாருமாகக் கூடி, ஒண்டா நிண்டு அதைச் செய்யலாமே! அப்பிடிச் செய்யாமல், ஏனிப்பிடி ஆளுக்கு ஒரு இடமாக நிண்டு கொண்டாடுகினம்? இது எனக்குச் சரியாகப் படேல்ல. எல்லாரும் எங்களுடைய கண்ணீரையும் கவலைகளையும் இழப்புகளையும் தங்கடை அரசியலுக்குப் பயன்படுத்த முயற்சிக்கினம். இதுதான் நடக்குதுஎன்று சொல்லிக் கவலைப்பட்டார் முள்ளிவாய்க்கால் பகுதியில் 2009 மே 17 இல் தன்னுடைய இரண்டு பிள்ளைகளையும் பலி கொடுத்த தந்தையொருவர்.

சனங்களின் எண்ணங்களையும் கவலைகளையும் யார்தான் கவனத்திற் கொள்கிறார்கள்? தங்கள் நிகழ்ச்சி நிரல்களுக்குள் சனங்களை அடக்கிக் கொள்வதற்கே ஒவ்வொரு தரப்பும் முயன்றது. இதனால் எந்த நிகழ்வில் கலந்து கொள்வது என்று தெரியாமல் பெரும்பாலானவர்கள் குழம்பிக் கொண்டு நின்றனர். இதற்குள் தங்கள் நிகழ்வுகளுக்கான ஆட்களைச் சேர்க்கும் நடவடிக்கையில் ஒவ்வொரு தரப்பும் முயன்று கொண்டிருந்தது.

இதைப் பார்த்துவிட்டு, ஆட்சேர்ப்பு அரசியல் இன்னும் ஓயவில்லை என்றார் இன்னொருவர். அவருடைய முகம் கறுத்து இறுகியிருந்தது. காறி உமிழ்ந்து விட்டுச் சென்றார்.
முப்பது ஆண்டுகளாக நடந்த யுத்தம் முள்ளிவாய்க்காலில் இறுதி மூச்சை விட்டது. அந்த இறுதிக்கணத்தில் அது ஏராளமான உயிர்களைப் பலியெடுத்தது. அந்தப் பலி தமிழ்ச்சமூகத்தின் ஆழ்மனதில் தாக்கத்தை உண்டாக்கியுள்ளது. இதுவே முள்ளிவாய்க்கால் நினைவுகூரலுக்கான அடிப்படை. ஆகவே இந்தக் களத்தில் உயிர்ப்பலியாகிய சனங்களை நினைவு கொள்வதற்கென்று தொடங்கப்பட்ட நிகழ்வு அரசியல் ஆடுகளத்திற்கான விளைபொருளாக மாறியிருக்கிறது. இந்த நோய் கடந்த ஆண்டுகளிலேயே வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது.
இதனால்தான், இந்த நிகழ்வை காயங்களை ஆற்றும் நிகழ்வாகக் கொள்ளுங்கள். காயங்களைப் பெருக்கும் நிகழ்வாகத் தயவு செய்து மாற்றிவிட வேண்டாம். எனப் பலரும் தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்தனர். கடந்த ஆண்டுகளில் நடந்த அனுபவங்களைக் கொண்டு, இதை அழுத்தமாகச் சொல்லி வருகிறார்கள் உளநல மருத்துவர்கள்.

குறிப்பாக கடந்த சில மாதங்களுக்கு முன் இந்த நிகழ்வை எப்படி நடத்த வேணும். எப்படி நடத்தக் கூடாது என்ற விதமாக உளவியலின் அடிப்படையில் மனநல மருத்துவர் டொக்ரர் சிவதாஸ் கருத்துத் தெரிவித்திருந்தார். மாங்குளத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த வேளையிலேயே அவர் இதைச் சொன்னார். அரசியலுக்காக, பாதிக்கப்பட்டவர்களின் துயரங்களைக் கிண்டாதீர்கள். நாங்கள் அவர்களைக் குணப்படுத்துவதற்காகப் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் அவர்களை மேலும் காயப்படுத்த முயற்சிக்கிறீர்கள். இது சமூகத்தில் பெரும் எதிர்விளைவுகளை உண்டாக்கும் என.

ஆகவே முள்ளிவாய்க்கால் நிகழ்வை ஒரு பிரார்த்தனை நிகழ்வாக மாற்ற வேண்டும். அரசியலாளர்கள் புறமொதுங்கி, மதகுருக்களும் சமூகச் செயற்பாட்டாளர்களும் சிறார்களும் இந்த நிகழ்வில் இணைந்திருப்பது நல்லது என்று கூறப்பட்டது. ஆனால், இதற்கு யார் இடமளிக்கப்போகிறார்கள்? அதுவும் தமிழ்ச்சூழலில் .தமிழ்ச்சூழலானது, சவப்பெட்டிகளையே தன்னுடைய அரசியலுக்காகப் பயன்படுத்தும் பாரம்பரியத்தைக் கொண்ட ஒன்றல்லவா. இதனால்தான் சவப்பெட்டிகளின் அரசியல் என்று தமிழ் அரசியலை விமர்சிக்கும் நிலை உருவானது. எலும்புக்கூடுகளின் ஊர்வலம் என்று கவிஞர் சேரன் இந்த நிலைமைகளைக் குறித்து எழுதியதை இங்கே நினைவிற் கொள்ளலாம்.

ஆண் எலும்புக் கூடுகள்
பெண் எலும்புக் கூடுகள்
சிறுவர் சிறுமியர்களின் எலும்புக் கூடுகள்
குழந்தையைக் கையிற் தாங்கிய எலும்புக் கூடுகள்
இளைய எலும்புக் கூடுகள்
முதிய எலும்புக்கூடுகள்
கைகள் அற்றவையும் கூட

எல்லாமே அரசியலுக்காகப் படைக்கப்பட்டவை.
ஆகவே அரசியலாளர்கள் தங்கள் நோக்கின்படி தங்களுக்கிசைவாக முள்ளிவாய்க்கால் நினைவு கூரல் நிகழ்வை நடத்தி முடித்தனர். வடக்குமாகாணசபையின் சார்பில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சுடரை ஏற்றினார். தொடர்ந்து கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் சுடரேற்றி விட்டு, உரையாற்றுவதற்கு முயன்றார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரிடம் சில ஊடகவியலாளர்களும் சனங்களும் கேள்விகளை எழுப்பினார்கள். சற்றுக் கடினமான கேள்விகள்தான் அவை.

போரை முடிவுக்குக் கொண்டு வந்ததுக்காக ஒரு காலம் அரசாங்கத்தைப் பாராட்டிப் பேசிய நீங்கள் இப்போது எப்படி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு வந்து நினைவுச் சுடர் ஏற்ற முடியும்?என்பது அந்தக் கேள்விகளில் ஒன்று. சம்மந்தன் தடுமாறி விட்டார். இதைத் தொடர்ந்து அங்கே சிறு சலசலப்பு ஏற்பட்டது. யாரும் அரசியல் பேசவேண்டாம் என்ற குரல்கள் உயர்ந்த தொனியில் எழவே கூட்டம் கலையத்தொடங்கியது. என்றாலுமென்ன? தமிழ்ப் பொது அரசியலும் தமிழ்ப் பொது மனமும் தன்னுடைய சுற்றுப்பாதையில் இருந்து விலகிப் பயணிக்கும் குணமுடையதில்லை. சில அபுர்மான தருணங்களும் அபுர்வமானவர்களும் விதிவிலக்காக அமைவதுண்டு. மற்றும்படி எல்லாமே மறதிக்கும் சுய நினைவிழப்பிற்கும் உள்ளான ஒன்றே.
ஆகவே இந்த ஆண்டு நடந்ததைப்போல அடுத்த ஆண்டிலும் இதே தவறுகளோடு ஒரு நினைவு கூரல் முள்ளிவாய்க்கால் திருவிழா நடக்கும். அப்போதும் பிரபலங்கள் வருவார்கள்.

ஊடகக் கவனம் குவியும். அரசியல் உரைகள் காற்றில் எழும். பிரகடனங்கள் முழங்கும். சடங்கு என்றால் அப்படித்தானே. எல்லாம் ஒரு நாளில் முடிய மறுபடியும் அந்த வெளி கைவிடப்பட்ட நிலமாக, தனித்த பட்டிப் புக்களின் மேடாகவே இருக்கும். காற்று ஊழையிட்டு அலையும்.

சில காலம் இப்படியே இது போகும். அதற்கப்பால்?

அதைப்பற்றி யாருக்குமே தெரியாது. அதுவரையிலும் ஆண்டுத் திருவிழா நடக்கும்.தமிழ் அரசியல் இவ்வாறான உற்சவங்களோடும் தி ரு வி ழா க் க ளோ டு ம் தா ன் கடந்து கொண்டும் கழிந்து கொண்டுமிருக்கிறது. ஜெனிவாத் திருவிழா, மாவீரர்நாள் திருவிழா, முள்ளிவாய்க்கால் திருவிழா என் ற வா றா க . ஏ னெ ன் றா ல் , அது கடந்த காலங்களில் இதைப்போன்ற இழப்புகளையும் வலிகளையும் இப்படியே அரசியல் முன்னெடுப்புக்காக அன்றி, அரசியல் ஆதாயங்களுக்காகக்கையாண்டது.

1958 இல் நடந்த வன்முறையைத் தமிழர்கள் மறக்க முடியாதென்றனர். பிறகு 1974 தமிழாராய்ச்சி மாநாட்டின் போதான படுகொலைகளை. பிறகு 1977 வன்முறையை. பிறகு 1981 யாழ் நூலக எரிப்பு மற்றும் யாழ்ப்பாண எரிப்பை. பிறகு 1983 வன்முறையை. பிறகு வெலிக்கடைச் சிறைப்படுகொலைகளை. பிறகு குமுதினிப் படகுக் கொலைகளை. பிறகு கொக்கட்டிச்சோலை, உடும்பன்குளம், வல்வெட்டித்துறை, ஒதியமலை, வட்டக்கண்டல் படுகொலைகளை.பிறகு நவாலி, நாகர்கோயில் படுகொலைகள் என... பிறகு செம்மணிப் புதைகுழிகளை. பிறகு, வாகரைக் கொலைகளை. இப்போது முள்ளிவாய்க்கால் அழிவை....

எல்லாவற்றையும் வைத்து ஒப்பாரியாக்கி அழுது புலம்பியது தமிழ்த்தரப்பு. இவற்றைத் தடுத்து நிறுத்தும் வல்லமையை அது கொண்டிருக்கவில்லை. ஆயுதப்போராட்ட அரசியல் பல வகையிலும் முன்னேற்றங்களைத் தந்திருந்தாலும் அதனுள்ளிருந்த ஜ ன நா ய க ம ி ன் மை ய ி லு ம் எதேச்சாதிகாரப் போக்கும் ஒட்டு மொத்தத்தில் போராட்டத்தையே அழித்து, சனங்களையும் பே ர ழ ி வு க் கு ள் ளா க் க ி ய து . இப்படியெல்லாம் நிகழ்ந்த பின்னும் இந்த வரலாற்றிலிருந்து படிப்பினைகளைப் பெறவில்லை. சுய மதிப்பீட்டைச் செய்யவில்லை. ஆய்வுகளுக்குச் செல்லவில்லை. பதிலாக இப்படித் திருவிழாச் செய்து கொண்டிருக்கிறது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை வைத்து, அரசியல் கைதிகளை வைத்து,

கொலைகளை வைத்து, போராடி வீழ்ந்த போராளிகளை (மாவீரர்களை) வைத்து.... ஒடுக்கப்பட்ட இனமொன்றின் கனதியான நாட்களை, உயிர் வலி வலி நிரம்பிய வாழ்வின் அடையாளங்களை இப்படி எளிமைப்படுத்தலாமா என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். உங்களின் கேள்வி நியாயமானதே. நிச்சயமாக அப்படிச் செய்யக்கூடாது என்பதில் மறுப்பில்லை. ஆனால் ஒடுக்கப்பட்ட இனமொன்று அல்லது விடுதலைக்காகப் போராடும் சமூகமானது தனக்கு ஏற்பட்ட காயங்களையும் வலிகளையும் எதிர்கொள்ளும் முறையே வேறாக இருக்க வேணும். தன்னுடைய காயங்களிலிருந்தும் வலிகளில் இருந்தும் படிப்பினைகளையும் போராட்டத்துக்கான உத்வேகத்தையும் பெற்றுக்கொள்ள வேணும். அவற்றை மலினமான அரசியலுக்குப் பயன்படுத்தக்கூடாது.

முள்ளிவாய்க்கால் நினைவு கூரலை இலங்கையின் ஏனைய சமூகத்தினரும் பங்கேற்கும் வகையில் மாற்றியிருக்க வேணும். அப்படிச் செய்திருக்க முடியும். நல்லாட்சிக்கான இந்தச் சந்தர்ப்பத்தில் புதிய அரசியல் திருத்தங்களுக்கும் மாற்றங்களுக்கும் உரிய இந்தச் சூழலில், காயப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு. இதை அரசியலுக்கு அப்பால் அனுகி, அவர்களை ஆற்றுப்படுத்துவோம் என்று தமிழ்த்தரப்பு முயற்சி செய்திருக்க வேண்டும். இதில் சரியாக வேலை செய்திருக்க வேண்டியது சம்மந்தனும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும். இது தமிழ் அரசியலை முன் கொண்டு சென்றிருக்கும். அரசியல் பேசாத வெற்றிகரமான அரசியலாக மாறியிருக்கும். மற்றவர்களின் அரசியலுக்கு எப்போதும் தலையாட்டிக் கொண்டிருப்பதை விட தமது அரசியலுக்குப் பிறரையும் சம்மதிக்க வைப்பதே பரபரஸ்பர அரசியல் செயற்பாடாகும்.

இது புரிந்துணர்வுக்கும் பகை மறப்புக்கும்நல்லிணக்கத்துக்குமுரிய நாட்கள் என்றால், அதற்காக முள்ளிவாய்க்காலுக்கு வாருங்கள் என்று பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் சம்மந்தன் அழைத்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படி நடக்கவில்லை. மட்டுமல்ல, தமிழ்த்தரப்பைக்கூட ஒருங்கிணைக்க எந்தவொரு சக்தியினாலும் முடியவில்லை. இதனால்தான் ஆளாளுக்குத் திருவிழாச் செய்ய முனைந்தனர்.

ஆகவே, மெய்யான முறையில் முள்ளிவாய்க்கால் நிகழ்வு பின்னடைவையே தந்திருக்கிறது. சனங்களின் வலி பெருப்பிக்கப்பட்டுள்ளது. கவலைகள் கூடியுள்ளன. மட்டுமல்ல, காலியிலிருந்து மகாசென் பலகயா என்ற அமைப்பினர் கிளிநொச்சிக்கு வந்து, சிங்கக் கொடியை ஏற்றிவிட்டுப்போகும் அளவுக்கு சிங்களத்தரப்பில் எதிர்நிலையை உண்டாக்கியுள்ளது. அரசாங்கம் யுத்த வெற்றியை வேறு நடத்தியுமிருக்கிறது.

இதெல்லாம் இந்த நாட்டுச் சூழல் எதிர்நிலையில் பயணிப்பதையே காட்டுகின்றன. வேறொன்றுமில்லை, பேய்களின் ஊர்வலமும் சவப்பெட்டிகளின் அரசியலும் என்ற நிலையிலேயே இலங்கையின் அரசியலும் இலங்கைச் சமூகங்களின் எதிர்காலமும் உள்ளன என்பதையும்தான்.

"பேய்களின் ஊர்வலமும்
சவப்பெட்டிகளின் அரசியலும்"

## டொமினிக் ஜீவா அவர்களின் 90வது பிறந்த நாள் நிகழ்வு



மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களின் 90 ஆவது பிறந்த தின வைபவம் 27.06.2017 அன்று மாலை 4.00 மணிக்கு மட்டக்குளி காக்கைதீவில் அவரது மகன் திலீபன் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் உட்பட பல இலக்கிய அபிமானிகள், ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு ஜீவா அவர்களை வாழ்த்தினார்கள்.

சுமார் ஐம்பது ஆண்டுகள் கடந்து இலக்கிய, சமூகப்பணியாற்றிய திரு ஜீவா அவர்களை மண் சஞ்சிகை தனது அட்டைப்படத்தில் பிரசுரித்து கௌரவித்த பெருமையும் உண்டு. நூறாண்டுகள் கடந்து அவர் வாழவேண்டும் என மண் சஞ்சிகையின் வாசகர்களும் எழுத்தாளர்களும் ஆசிரியர் குழுவும் வாழ்த்தி மகிழ்கிறோம்!...

# அடிமைத்தனங்களில் சில....

இன்றளவும் நம்மையே அறியாமல் ஏதோ விடயத்தில் நாம் அடிமைகளாகத்தான் வாழ்ந்து வருகின்றோம். வாழ்க்கையின் பல சூழலில், தருணங்களில் நாம் வாழ்கிறோம் என்பதை விடப் பிழைக்கிறோம் என்பதுதான் உண்மை. பண்டைய காலம் தொட்டு இன்றைய காலம்வரை உலகில் பல இடங்களில் அடிமைத்தனம் இருந்துகொண்டுதான் இருக்கின்றது.

உலகின் வறியநாடுகளில் அடிமைகளும் அடிமைத்தனங்களும் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இவற்றைவிட மதத்தின் பெயரிலும் நிறம், நாடு, பணம், தொழில், மொழி, கலை, கலாச்சாரம் என்ற போர்வையிலும் அடிமைத்தனங்கள் நிறையவே காணப்படுகின்றன.இந்தியா போன்ற வறிய நாடுகளில் பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் அடிமைத்தனங்களின் உச்சியாக அவர்கள் விலைபேசி விற்கப்படுவதும் நடைபெறுகின்றன. ஏன் மனிதக்கழிவுகளை மனிதர்களே தமது கைகளால் அகற்றிச் சுத்தம்செய்யும் வேலைகளை இந்தியா போன்ற நாடுகளில் ஒதுக்கப்பட்ட மக்களும் அடிமை மக்களும் செய்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

-இன்றைய நவீன உலகில் அடிமைகள்-அடிமைத்தனத்தின் கீழ் உள்ள மக்கள் எண்ணிக்கையில் உலகின் முதலிடம் வகிக்கின்றது இந்தியா. வானுக்கு றொக்கட்டைவிடும் இந்தியாவில்தான் அடிமைத்தனமும், கொத்தடிமைத்தனமும் பாலியல் பலாத்காரங்களின் எண்ணிக்கை வானளவில் உயர்ந்துள்ளன.

-அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பெஞ்சமின் பிராங்ளின் அடிமைத்தனத்தை ஒழிக்க வேண்டும் என்று 1790ம் ஆண்டளவில் போரடினாராம்.

-அமெரிக்க வெள்ளை மாளிகை கட்டப்படும்போது அப்போது அடிமைகளைக்கொண்டுதான் கட்டப்பட்டது.

-இதே போல் உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிட்டுக்கள் கூலியாட்கள் மட்டுமல்லாமல் அப்போதய அடிமைகளைப் பயன்படுத்தியே அக்கால அரசர்களால் கட்டப்பட்டது.

-பண்டைய கிரேக்கம் மற்றும் ரோமாபுரி தேசங்களின் ஆட்சியாளர்கள் அடிமைகளை உப்புக் கொடுத்து விலைபேசி வாங்கப்பட்டனர்.

# பி பா கூட்டமைப்புக்களின் உதைபந்து கிண்ணப் போட்டி
FIFA Confederations Cup-**2017**

**தோற்றம் 1992**
**அணிகளின் எண்ணிக்கை - 8**
**தற்போதைய வெற்றி வாகையாளர் பிரேசில் (4வது முறை)**
**அதிக முறை வென்ற அணி பிரேசில் (4 முறைகள்)**

**ஃபிஃபா கூட்டமைப்புக்களின் கோப்பைப் போட்டி** (FIFA Confederations Cup) **தேசிய அணிகளுக்கிடையே பன்னாட்டுக் கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பினால் நடத்தப்படும் பன்னாட்டு காற்பந்தாட்டப் போட்டியாகும். தற்போது ஒவ்வொரு நான்காண்டுகளுக்கு ஒருமுறை இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன. பிபா அமைப்பின் கீழ் ஒவ்வொரு கண்டத்திற்கும் அமைக்கப்பட்டுள்ள ஆறு கூட்டமைப்புக்களின் (ஐரோப்பிய கால்பந்து சங்கங்களின் ஒன்றியம், தென் அமெரிக்க கூட்டமைப்பு, வடக்கு மத்திய கரீபியன் கூட்டமைப்பு, ஆபிரிக்க கூட்டமைப்பு, ஆசிய கூட்டமைப்பு, ஓசியானா கூட்டமைப்பு), போட்டிகளில் வென்ற அணிகள், உலகக்கோப்பை வென்ற அணி மற்றும் போட்டி நடத்தும் நாட்டின் அணி என எட்டு அணிகள் பங்கேற்கின்றன.**

**2005ஆம் ஆண்டிலிருந்து எந்த நாட்டில் உலகக்கோப்பைப் போட்டிகள் வரும் ஆண்டில் நடக்க உள்ளதோ, அதே நாட்டில் முந்தைய ஆண்டு நடத்தப்படுகிறது இது உலகக்கோப்பைப் போட்டிகளை நடத்த ஒரு ஒத்திகையாக அமைகிறது. 2013 பிபா கூட்டமைப்புக்களின் கோப்பை போட்டியை ஆனி 15 முதல் ஆனி 30 வரை நடத்திய பிரேசில் இறுதி ஆட்டத்தில் ஸ்பானியாவை 3-0 என்ற கணக்கில் தோற்கடித்து கோப்பையை வென்றது.**

**இந்தப் போட்டிகள் துவக்கத்தில் சவூதி அரேபியாவால் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தது. இதனை அரசர் ஃபாட் கோப்பை (கூட்டமைப்புகளில் வென்றோர் கோப்பை அல்லது கண்டங்களிடை போட்டி) என அழைத்தனர். 1992இலும் 1995இலும் சவூதி அரேபிய தேசிய அணியும் கூட்டமைப்பு போட்டிகளில் வென்ற அணியினரும் இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டனர். 1997இல் இந்தப் போட்டியை ஒருங்கிணைக்கும் பொறுப்பை பன்னாட்டுக் காற்பந்துச் சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டது. ஃபிஃபா கூட்டமைப்புக்களின் கோப்பை என்ற பெயரில் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இந்தப் போட்டியை நடத்தி வந்தனர்.**

2005ஆம் ஆண்டு முதல் இது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு உலகக் கோப்பைக்கும் முந்தைய ஆண்டில் எதிர்வரும் உலகக்கோப்பை போட்டிகளை ஏற்று நடத்தவுள்ள நாடு இதனை நடத்தும் பொறுப்பை பெறுகின்றது. உலகக்கோப்பைக்கு ஒரு ஒத்திகையாகக் கருத்தப்படும் இந்தப் போட்டிகள் உலகக்கோப்பைக்காக தயார் செய்யப்பட்ட விளையாட்டரங்குகளின் எண்ணிக்கையில் பாதியை பயன்படுத்துகின்றன. உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி அடுத்த வருடம் ஆனி மாதம் ரஷ்ஷியாவில் நடைபெறவிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இனி இந்தப் போட்டிகள் பற்றிய சில தகவல்களைப் பார்ப்போம்...

## FIFA Confederations Cup-2017

-நடைபெற்ற நாடு-ரஷ்ஷியா

-நடைபெற்ற காலம்-17.06.2017 - 02.07.2017

-விளையாட்டு அரங்குகள்- பார்வையாளர்கள்

| | | |
|---|---|---|
| Sankt Petersburg | - | 69.500 |
| Moska | - | 42.000 |
| Kasan | - | 40.015 |
| Sotschi | - | 47.659 |

-எப்படியாக இந்த 8 நாடுகள் தெரிவு செய்யப்பட்டன...

1-ரஷ்ஷியா-போட்டியை நடாத்தும் நாடு (இதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது)
2-யேர்மனி-இறுதியாக உலகக் கிண்ணத்தைப் பெற்ற நாடு (2014)
3-சிலே-இறுதியாக தென்னமெரிக்கா கிண்ணத்தைப் பெற்ற நாடு (2015)
4-அவுஸ்திரேலியா-இறுதியாக ஆசியாக்கிண்ணத்தைப் பெற்ற நாடு (2015)
5-மெக்ஸிக்கோ-இறுதியாக வட அமெரிக்கா கிண்ணத்தைப் பெற்ற நாடு(2015)
6-நியூசிலாந்து-இறுதியாக ஓசியன் நாடுகள் கிண்ணததைப் பெற்றநாடு(2016)
7-போத்துக்கல்-இறுதியாக ஐரோப்பாக்கிண்ணத்தைப் பெற்றநாடு (2016)
8-கமறோன்-இறுதியாக ஆபிரிக்கா கிண்ணத்தைப் பெற்றநாடு (2017)

இரண்டு குழுக்களாகத் தெரிவு செய்யப்பட்ட நாடுகள்...

| | |
|---|---|
| 1. ரஷ்ஷியா | 1. கமறோன் |
| 2. நியூசிலாந்து | 2. சிலே |
| 3. போத்துக்கல் | 3. அவுஸ்திரேலியா |
| 4. மெக்ஸிக்கோ | 4. யேர்மனி |

-17.06.2017 தொடக்கம் 25.06.2017 வரை நடைபெற்ற தெரிவுப் போட்டிகளில் தகுதி இழந்தநாடுகள் -ரஷ்ஷியா, கமறோன், நியூசிலாந்து, அவுஸ்திரேலியா.

-28,29-06-2017ல் நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் பங்குபற்றிய நாடுகள்.

போத்துக்கல் - சிலே - 3 - 0

யோ்மனி - மெக்ஸிக்கோ - 4 - 1

-02.07.2017 அரை இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்து 3வது இடத்தைப் பெறுவதற்கான போட்டியில் வெற்றி பெற்றநாடு..

போத்துக்கல்-மெக்ஸிக்கோ - 2 - 1

-02.07.2017ல் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற அணி..யோ்மனி

யோ்மனி - சிலே - 1 - 0

## அதிக தடவைகள் இந்த வெற்றிக்கிண்ணத்தைப் பெற்ற நாடுகள்

1வது-பிறேசில் - 4 தடவைகள் (1997, 2005, 2009, 2013)
2வது-பிரான்ஸ் - 2 தடவைகள் (2001, 2003)
3வது-ஆயர்ந்தீனா - 1 தடவை (1992)
4வது-மெக்ஸிக்கோ- 1 தடவை (1999)
5வது-டென்மார்க் - 1 தடவை (1995)
6வது-யோ்மனி - 1 தடவை (2017)

## 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டிகளின் பெறுபேறுகள்...

வெற்றிபெற்ற நாடுகள்

| ஆண்டு-நடைபெற்றநாடு | 1வது | 2வது | 3வது | 4வது |
|---|---|---|---|---|
| 1992-சவுதிஅரேபியா | ஆயர்ந்தீனா | சவுதிஅரேபியா | அமெரிக்கா | எலிபன்றிகூஸ் |
| 1995- ” | டென்மார்க் | ஆயர்ந்தீனா | மெக்ஸிக்கோ | நைஜீரியா |
| 1997- ” | பிறேசில் | அவுஸ்திரேலியா | செக்குடியரசு | உருகுவே |
| 1999-மெக்ஸிக்கோ | மெக்ஸிக்கோ | பிறேசில் | அமெரிக்கா | சவுதிஅரேபியா |
| 2001-யப்பான்.கொரியா | பிரான்ஸ் | யப்பான் | அவுஸ்திரேலியா | பிறேசில் |
| 2003-பிரான்ஸ் | பிரான்ஸ் | கமறோன் | துருக்கி | கொலம்பியா |
| 2005-யோ்மனி | பிறேசில் | ஆயர்ந்தீனா | யோ்மனி | மெக்ஸிக்கோ |
| 2009-தென்னாபிரிக்கா | பிறேசில் | அமெரிக்கா | ஸ்பெயின் | தென்னாபிரிக்கா |
| 2013-பிறேசில் | பிறேசில் | ஸ்பெயின் | இத்தாலி | உருகுவே |
| 2017-ரஷ்ஷியா | யோ்மனி | சிலே | போத்துக்கல் | மெக்ஸிக்கோ |

# முருங்கைக்காயில் குவிந்து கிடக்கும் ஆரோக்கிய நன்மைகள்

முருங்கை இலைகளில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்புச் சத்து ஆகியவை இருக்கின்றன, முருங்கை காய் உடலுக்கு வலிமை தருகிறது. இந்த இலைகளை நெய்யில் வ
தக்கி சாப்பிட்டால் ரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் ஊறும், பல் கெட்டிப்படும், தோல் வியாதிகள் நீங்கும்.
முருங்கை கீரையை வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் உடல் சூடு தணியும்.

வெப்பத்தின் காரணமாக உடலில் ஏற்படும் மந்தம், உட்சூடு, கண்நோய், பித்தமூர்ச்சை இவற்றை நீக்கும் குணம் படைத்தது முருங்கைக் கீரை. முருங்கைக்காய் பிஞ்சு ஒரு பத்திய உணவாகும். இதை நெய் சேர்த்தோ அல்லது புளி சேர்த்தோ சமைப்பது நலம்.

முருங்கைப் பட்டையை நீர்விட்டு அரைத்து வீக்கங்களுக்கும் வாயு தங்கிய இடங்களுக்கும் போடலாம். முருங்கை இலையை உருவி காம்புகளை நறுக்கி விட்டு பின் மிளகு ரசம் வைத்து சாப்பாட்டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கும். அதே வேளையில் சிறுநீரைப் பெருக்கும். முருங்கைப் பட்டை, உலோகச் சத்துக்கள் நிறைந்தது. உணவில் கலந்த விஷத்துக்கும் நரம்புக் கோளாறுக்கும் இது நல்ல மருந்து.

கடுமையான ரத்த சீதபேதி, வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப்புண் ஆகிய வியாதிகளுக்கெல்லாம் முருங்கைக் காய் கை கண்ட மருந்து. முருங்கை விதையைக் கூட்டு செய்து சாப்பிடலாம், இது மூளைக்கு நல்ல பலத்தை தரும், தாது விருத்தியை உண்டு பண்ணும். முருங்கை இலை சாறுடன் பால் கலந்து குழந்தைகளுக்கு தந்தால்,இரத்த சுத்தியும்,எலும்புகளையும் வலுப்படுத்தும்.

இதில் கர்ப்பிணிகளுக்கு தேவையான கால்சியம், இரும்புச்சத்து, விட்டமின் உள்ளது. முருங்கை இலைச்சாற்றுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவ முகப்பருக்கள் மறையும்.முருக்கைகாய் இருதயத்தை வலுப்படுத்துவதுடன்,

## யாரெல்லாம் க்ரீன் டீ குடிக்கக்கூடாது? உண்மை தெரிந்து கொள்ளுங்கள்..............

க்ரீன் டீ என்ன தான் ஆரோக்கியமான பானமாக இருந்தாலும், குறிப்பிட்ட உடல்நல பிரச்சனைகளைக் கொண்டவர்கள் இந்த பானத்தைக் குடிக்கக்கூடாது.குறிப்பாக ஒரு நாளைக்கு 4 கப்பிற்கு மேல் க்ரீன் டீயைக் குடித்தால், அது உடல் ஆரோக்கியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

சர்க்கரை நோயாளிகள்

சர்க்கரை நோயாளிகள் க்ரீன் டீயை அளவாக குடித்தாலும், அது ஆரோக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். அதுவும் இந்த பானம் இரத்த சர்க்கரை அளவில் இடையூறை ஏற்படுத்தி, தலைச்சுற்றல், பதற்றம், நெஞ்செரிச்சல் போன்றவற்றை உண்டாக்கும். ஆகவே சர்க்கரை நோயாளிகள் க்ரீன் டீயைத் தவிர்ப்பது நல்லது.

கர்ப்பிணிகள்

கர்ப்பமாக இருந்தாலோ அல்லது கருத்தரிக்க நினைத்தாலோ, க்ரீன் டீயை அதிகம் குடிக்கக்கூடாது. இதில் உள்ள காப்ஃபைன் எளிதில் இரத்தத்தில் கலந்து கருவுடன் கலந்து, பெரும் பிரச்சனையை ஏற்படுத்தும். எனவே கர்ப்பிணிகள் அல்லது கருத்தரிக்க நினைப்பவர்கள், க்ரீன் டீயைக் குடிக்கும் முன் மருத்துவரிடம் ஆலோசித்துக் கொள்ளுங்கள்.

உயர் இரத்த அழுத்தம்

க்ரீன் டீ அட்ரினலின் என்னும் ஹார்மோனின் சுரப்பை அதிகரித்து, இதய அழுத்தத்தை வேகமாக்கும். ஆகவே உயர் இரத்த அழுத்த பிரச்சனை உள்ளவர்களுக்கு க்ரீன் டீ நல்லதல்ல.

குழந்தைகள்

குழந்தைகளுக்கு இது நல்லதல்ல. இதில் உள்ள டானின்கள், புரோட்டீன் மற்றும் கொழுப்புக்களை உடல் உறிஞ்சுவதை தடுக்கும். மேலும் இதில் உள்ள காப்ஃபைன், அவர்களது உடலில் வறட்சியை ஏற்படுத்தும்.

இரத்த சோகை

இரத்த சோகை அல்லது இரும்புச்சத்து குறைபாடு உள்ளவர்கள் க்ரீன் டீ குடிப்பதைத் தவிர்க்க வேண்டும். 2001 ஆம் ஆண்டு வெளிவந்த அறிக்கையில், க்ரீன் டீயை அதிகம் குடிக்கும் போது, அது உணவில் உள்ள இரும்புச்சத்தை உறிஞ்சவிடாமல் தடுத்து, உடல் ஆரோக்கியத்தை மோசமாக்கும் என்பது தெரிய வந்தது.

தூக்கமின்மை

க்ரீன் டீயை அதிகம் பருகினால், அது மூளையில் தூக்கத்தை தூண்டும் இரசாயனங்களைத் தடுத்து, தூக்கத்தைப் பெறவிடாமல் செய்யும்.

ஆகவே தூக்கமின்மை பிரச்சனை உள்ளவர்கள் க்ரீன் டீ குடிப்பதைத் தவிர்ப்பதே நல்லது.

# தீவிரவாத தாக்குதல்களால் மிகவும் பாதிக்கப்படும் 10 நாடுகள்

சர்வதேச அளவில் தீவிரவாத தாக்குதல்களால் உயிரிழப்பு மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகும் முதல் 10 நாடுகளின் பட்டியல் தற்போது வெளியாகியுள்ளது.
சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில் இஸ்லாமிய நாடுகளில் ஒன்றான ஈராக்கில் தான் அதிகளவில் தீவிரவாத தாக்குதல்களும் உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.
2015-ம் ஆண்டு புள்ளிவிபரத்தின் அடிப்படையில் தீவிரவாத தாக்குதல்களால் பாதிப்பிற்கு உள்ளான முதல் 10 நாடுகளின் பட்டியல் இதோ

ஈராக்

2015-ம் ஆண்டில் மட்டும் ஈராக் நாட்டில் 2,415 தீவிரவாத தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. இத்தாக்குதலில் 6,960 பேர் கொல்லப்பட்டதுடன் 11,900 பேர் படுகாயம் அடைந்தனர்.
2003-ம் ஆண்டு அமெரிக்கா ஈராக் நாட்டின் மீது போர் தொடுக்க தொடங்கியது முதல் தற்போது வரை 40 தீவிரவாத மற்றும் கிளர்ச்சியாளர்கள் அமைப்பு ஈராக் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான்

அண்டை நாடான பாகிஸ்தானில் தீவிரவாதம் ஓரளவிற்கு கட்டுக்குள் வந்துள்ள நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டில் தீவிரவாதம் தலைவிரித்து ஆடுகிறது.
2015-ம் ஆண்டில் மட்டும் 1,715 தீவிரவாத தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. 5,312 பேர் கொல்லப்பட்டனர். 6,249 பேர் படுகாயம் அடைந்தனர்.

நைஜீரியா

நைஜீரியாவில் போகோ ஹாரம் என்ற தீவிரவாத அமைப்பும் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பும் தாக்குதலுக்கு காரணமாக இருந்து வருகின்றன.
2015-ம் ஆண்டில் இந்நாட்டில் நிகழ்ந்த 588 தாக்குதல்களில் 4,950 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 2,786 படுகாயம் அடைந்தனர்.

பாகிஸ்தான்
2006-ம் ஆண்டிற்கு பிறகு பாகிஸ்தான் நாட்டில் தீவிரவாத தாக்குதல்கள் என்பது வெகுவாக குறைந்து வருகிறது. எனினும், கடந்த 2015-ம் ஆண்டில் 45

சிரியா
தீவிரவாத தாக்குதல்களை தவிர்த்து விட்டு உள்நாட்டு யுத்தத்தால் இந்நாட்டில் இதுவரை 4,00,000 பேர் பலியாகியுள்ளனர்.

எனினும் தீவிரவாத தாக்குதல்களுடன் ஒப்பிடுகையில் இந்நாட்டில் 384 தாக்குதல் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 2,761 பேர் உயிரிழந்தனர் மற்றும் 2,830 காயம் அடைந்தனர்.

ஏமன்

சிரியாவை போல் ஏமன் நாட்டிலும் ஹவுதி போராளிகளுக்கும் அந்நாட்டு அதிபருக்கும் இடையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்று வருகிறது.

தீவிரவாத தாக்குதல்களுடன் ஒப்பிடுகையில் 467 சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 1,519 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 2,599 பேர் காயம் அடைந்தனர்.

இந்தியா

இந்தியாவில் பெரும்பாலும் அரசியல் உள்நோக்கம் காரணமாக தீவிரவாத தாக்குதல் நடைபெறும் என்பதால் அதன் உயிரிழப்புகள் குறைவாக இருக்கும்.

எனினும் 2015-ம் ஆண்டு நிகழ்ந்த 797 சம்பவங்களில் 289 பேர் உயிரிழந்து 501 பேர் காயமடைந்துள்ளனர்.

சோமாலியா

சோமாலியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகளின் நடமாட்டம் அதிகமானதாக இருந்தாலும் அவர்களின் தாக்குதல் மிகவும் குறைந்துள்ளது.

2015-ம் ஆண்டில் மட்டும் 241 தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 659 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 463 பேர் காயம் அடைந்துள்ளனர்.

எகிப்து

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான எகிப்தில் தீவிரவாத தாக்குதல்கள் அண்மை காலமாக குறைந்து அந்நாட்டின் பொருளாதாரம் சீரடைந்து வருகிறது.

லிபியா

லிபியா அதிபரான கடாபியை கொன்ற நாள் முதல் லிபியாவில் உள்நாட்டு யுத்தம் தொடங்கியது. இந்த உள்நாட்டு யுத்தம் தான் இன்று சிரியா வரை பரவியுள்ளது. 2015-ம் ஆண்டில் லிபியாவில் நிகழ்ந்த 432 தாக்குதல்களில் 454 பேர் கொல்லப்பட்டதுடன் 660 பேர் படுகாயம் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

-------------------------

# தாய்நாடு பற்றி போதிய அறிவு இல்லாத குடிமக்கள்: எந்த நாட்டினர் தெரியுமா?

தாய்நாடு பற்றி போதிய அறிவு இல்லாத குடிமக்கள் வசிக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது. ஒரு நாட்டில் பிறந்து வளரும் ஒருவருக்கு அவருடைய தாய்நாட்டை பற்றி முழுமையான தகவல்கள் தெரியுமா என்பது குறித்து அண்மையில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
உலகம் முழுவதும் 40 நாடுகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலும் 1,000 பேரிடம் கேள்விகள் கேட்கப்பட்டது. ஒருவர் பிறந்த நாட்டில் உள்ள மக்கள் தொகை, அரசாங்கம், கலாச்சாரம், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை பற்றி கேள்விகள் கேட்கப்பட்டது. இந்தக் கேள்விகளுக்கு பதில் தெரியாமல் தவித்தவர்களில் இந்திய குடிமக்கள் என ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.
தாய்நாட்டை பற்றி முழுமையாக தெரியாத குடிமக்கள் வசிக்கும் முதல் 10 நாடுகளின் பட்டியல் இதோ!

1. இந்தியா
2. சீனா
3. தைவான்
4. தென் ஆப்பிரிக்கா
5. அமெரிக்கா
6. பிரேசில்
7. தாய்லாந்து
8. சிங்கப்பூர்
9. துருக்கி
10. இந்தோனேசியா



## யேர்மனியின் முன்னாள் காண்சிலர் கெல்மட் கோல் காலமானார்...

யேர்மனியின் முன்னாள் காண்சிலரும், நீண்ட காலம் பதவி வகித்தவருமான கெல்மட் கோல் அவர்கள் கடந்த 16.06.2017 அன்று தனது 87வது வயதில் காலமானார். நாட்டை ஆட்சி செய்த காலத்தில் பெரும் புகழுடன் நிர்வாகத்தை கையாண்டார். உலகத்தலைவர்களின் நன்மதிப்பையும் பெற்றுக்கொண்ட இவர் யேர்மனிய மக்களால் மிகவும் போற்றப்பட்ட காண்சிலராக மதிக்கப்பட்டார். நீண்டகாலம் பிரிந்திருந்த மேற்கு - கிழக்கு யேர்மனியை ஒன்றிணைத்த (1990)பெருமையில் இவரின் பங்கும் உழைப்பும் நினைவுகொள்ளப்படுவதுடன் என்றும் போற்றப்படுகின்றது. இவர் பற்றிய சிறு குறிப்பை இங்கே பார்ப்போம்.

முழுப்பெயர் - Helmut Josef Michael Kohl
பிறப்பு -03.04.1930 Ludwigshafen
இறப்பு -16.06.2017 Ludwigshafen (87 வயது)
மனைவி -Maike Kohl-Richter (verh. 2008 - 2017), Hannelore Kohl (verh. 1960–2001)
பிள்ளைகள் - (2) Walter Kohl, (1963 பிறப்பு)
Peter Kohl (1965 பிறப்பு)
அரசியலில் பதவிகள் -
முதலமைச்சர் 1976 றேயின்லாண்ட் பெள்ஸ் மாநிலம் Ministerprsident des Landes Rheinland-Pfalz

-ஜேர்மனியின் 6வது கான்சிலர் (அதிகாரம் மிக்க முதல்வர்) 1982 - 1998 வரை 16 வருடங்கள் ஆட்சியின் தலைவர். Bundeskanzler der Bundesrepublik Deutschland.

-1973 - 1998 வரை C D U கட்சியின் தலைவர்.

-2000 தொடக்கம் இறக்கும்வரை கட்சியின் கௌரவ சிறப்புத்தலைவர்.

-1954ம் ஆண்டு அரசியலில் பிரவேசித்த இவர் றெயின்லாண்ட் பௌ்ஸ் மாநில முதலமைச்சராக 8 வருடங்களும் நாட்டின் கான்சிலராகப் 16 வருடங்களும் பதவி வகித்திருக்கிறார்.

-யேர்மனிய அரசியல் வரலாற்றில் இவர்தான் ஆகக்கூடிய வருடங்கள் (16) கான்சிலராகப் பதவிவகித்த பெருமையும் இவருக்கு உண்டு.

Bundestages என்று அழைக்கப்படும் யேர்மனிய பாராளுமன்றத்தில் நான்குமுறை நடைபெற்ற பொதுத்தேர்தலில் நான்கு தடவையும் வெற்றி பெற்றுக் கான்சிலராகக் கடமையாற்றியுள்ளார். இவரது ஆட்சிக்காலத்தில் நாட்டின் பல மாற்றங்கள் முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அயல்நாடுகளின் தலைவர்களுடனான நட்புறவு, வல்லரசு நாடுகளுடனான நட்புறவு, வெளிநாட்டுக் கொள்கை, சிறப்பாக இருந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ நாடுகள், ஐரோப்பிய ஆணையம் ஆபிரிக்க ஒன்றியம், அரபு ஒன்றியம், சோவியத் ஒன்றியம் போன்ற பல அமைப்புக்களுடன் மதிக்கத்தக்க உறவுகளைப் பேணினார்.

நாட்டைப் பொருளாதாரம் , நிதி, வர்த்தகம், பாதுகாப்பு போன்ற பல துறைகளில் முன்னேற்றியதுடன் வேலையில்லாப் பிரச்சனைக்கும் பல கொள்கைகளைக் கடைப்பிடித்து நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்சென்றார். நீண்ட காலம் பிரிந்து இருந்த ஒரே மொழி, ஒரே இன மக்களின் கிழக்கு - மேற்கு யேர்மனிகள் ஒன்றிணைவதற்கு இவர் ஆற்றிய பங்களிப்பு இன்றும் போற்றப்படுவதுடன், அவரின் மதிப்பும் மரியாதையும் உலகளாவிய வகையில் பேசப்பட்டதாகும். சர்வதேச சமாதான நோபல் பரிசுக்கு இவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டும் கிடைக்காமல் போனது துரதிஸ்டமே. எப்படி இருந்தாலும் உலகத்தால் போற்றப்பட்ட, மதிக்கப்பட்ட பெருந்தலைவராகவே புகழப்பட்டார்.

குறிப்பாக இவரின் ஆட்சிக் காலங்களில்தான் இலங்கைத் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையினர் அடைக்கலம் கோரி அரசியல் தஞ்சம் கோரி இந்த நாட்டுக்குள் வந்து சேர்ந்தனர். இவர்களில் பலர் இன்று இந்த நாட்டுக் குடியுரிமை பெற்று வாழ்கிறார்கள். இன்னும் பலர் கனடா, அமெரிக்கா,

பிரான்ஸ், சுவிஸ், நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே, சுவீடன் இத்தாலி போன்ற நாடுகளுக்குச் சென்று இன்று சந்ததி சந்ததியாக வாழ்கின்றனர். இந்த நாடுகளுக்குச் சென்ற அனைவருக்கும் யேர்மனிதான் வழிப்பாதையாகவும் வழிகாட்டி நாடாகவும் இருந்திருப்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அன்று உரிமை இழந்து, உடமை இழந்து, சொத்து சுகம் இழந்து, உயிர்களைப் பறிகொடுத்துத் தப்பி வந்த என்போன்ற அகதிகளுகளுக்குப் புகலிடம் தந்த நாடு யேர்மனிதான். அதுவும் மறைந்த சான்சிலர் கெல்மட் கோலின் ஆட்சிக்காலத்தில்தான் என்று பெரு நன்றியோடு கூறலாம்.

2004ம் ஆண்டில் நமது இலங்கை நாட்டில் சுனாமி என்னும் பேரழிவு ஏற்பட்டபோது சான்சிலர் கோல் அவர்கள் விடுமுறையில் இலங்கையில் ஹொட்டலில் நின்றவர்தான். தெய்வாதீனமாக உயிர் பிழைத்தார். அந்த அனர்த்தங்களை நேரடியாகக் கண்டுகொண்டு, நாடு திரும்பியதும் (யேர்மனி) உடனடியாகவே யேர்மனி அரசுடன் தொடர்பு கொண்டு 3 லட்சம் EURO பணத்தை அனுப்பி நிவாரணப் பணிகளுக்கு உதவி வழங்கியதை நாம் மறக்கமுடியாது.

யேர்மனி நாடானது பலகட்சி அமைப்பு முறையைக்கொண்ட ஜனநாயக நாடாகும். மனித உரிமைகளும் பாதுகாப்பும் நிறைந்த நாடாகும். அனைத்துக் கட்சிகளும் அமைப்புக்களும், பல உலகநாடுகளின தலைவர்களும் பிரமுகர்களும் அன்னாரின் மறைவு கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவித்ததுடன் பல நாடுகளின் தலைவர்களும் அவரின் இறுதிக்கிரிகைகளில் (01.07.2017) கலந்துகொண்டு இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர். எம்மையும் வாழ வைத்த இந்த நாட்டின் தலைவராக இருந்த இந்தப் பெருமகனுக்கு நாமும் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வோம்....

---------------

வாசிப்பு...

வாசிப்புத்தான் மனிதனைப் பூரணப்படுத்துகின்றது என்று கூறுவார்கள் இது முற்றிலும் உண்மையான விடையமாகும். அந்த வகையில் ஜேர்மனியில்...

-வாசிப்புப் பழக்கமுடையவர்கள் - 27% பேர்

-தொடர் வாசிப்புப் பழக்கமுடையவர்கள் - 59% பேர்

-வாசிப்புப் பழக்கம் இல்லாதவர்கள் - 14% பேர்

# கவிஞர் அப்துல் ரகுமான் காலமானார்



கவிஞர் அப்துல் ரகுமான்(80) உடல் நலக்குறைவு காரணமாக 02-06-2017 அன்று அதிகாலை காலமானார். சாகித்ய அகாடமி விருது வென்ற கவிஞர் அப்துல் ரகுமான், மூச்சுத்திணறல் காரணமாக காலமானார். சென்னை பயூர் வீட்டில் அவர் உயிர் பிரிந்தது. வாழ்க்கைகுறிப்பு.

கவிஞர் அப்துல் ரகுமான், மதுரையில் 1937ம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையும், தாத்தாவும் சிறந்த உருது கவிஞர்கள். கல்லூரியில் தமிழை சிறப்புப் பாடமாக எடுத்துப் பயின்று, இலக்கண, இலக்கியங்களை கற்று கவிதை எழுதத் துவங்கினார். தமிழ், ஆங்கிலம், அரபி, உருது, பாரசீகம், இந்தி ஆகிய பல மொழிகளிலும் புலமை பெற்றிருந்த இவர், சமஸ்கிருதமும் பயின்றவர். இவரது முதல் கவிதை தொகுப்பு "பால்வீதி" 1974ம் ஆண்டு வெளிவந்தது. தொடர்ந்து பல இதழ்களில் கட்டுரைகள், கவிதைகள் எழுதினார். சாகித்ய அகாடமி:

வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் தமிழ்துறை தலைவராக 20 ஆண்டுகள் பணியாற்றினார். தமிழில் கவிதைக் குறியீடுகள் குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்ற இவர், 1999ல் "ஆலாபனை" கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாடமி விருது வென்றார். கவியரசர் பாரிவிழா விருது, தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது, கலைமாமணி, கம்பர் விருது, உமறுப்புலவர் விருது உள்ளிட்ட பல விருதுகளையும் வென்றுள்ளார்.

# தாயகச செய்திகள் சில...

வறட்சியால் 6 இலட்சத்து 29 ஆயிரத்து 742 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.366 நலன்புரி நிலையங்களில் 77 ஆயிரத்து 432 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.தொடர்ச்சியான நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஒரே நாளில் இலங்கையில் 202 பேர் பலி! 110 பேர் மாயம்! 5 இலட்சம் பேர் பாதிப்பு..நாட்டில் நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக இதுவரை 202 பேர் உயிரிழந்துள்ளார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவில் சிக்கி இவர்கள் பலியாகியுள்ளார்கள். மேலும் குறித்த அனர்த்தத்தில் 5 இலட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. நாட்டின் பல பாகங்களிலும் இயற்கை அனர்த்தத்தால் பலர் பாதிக்கப்பட்டதுடன், அதிலும் குறிப்பாக களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி மாவட்டங்களிலேயே உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் 4 இலட்சத்து 52 ஆயிரத்து 661 சிறுவர்கள் பாடசாலை கல்வியை பெறாது உள்ளதாகவும் கூடுதலாக மலையக மற்றும் கிராமிய பகுதிகளில் வாழும் சிறுவர்களே இந்த நிலைமையை எதிர்கொண்டு வருவதாக தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களத்தின் அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. இலங்கையின் கல்வி மட்டம் உயரிய அளவில் உள்ள போதிலும் இந்த நாட்டில் பாடசாலை செல்லாத மாணவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 52 ஆயிரத்து 661 என ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களத்தின் மூலம் கடந்த ஆண்டுக்கான மாணவர் கணக்கெடுப்பு அறிக்கையில் இந்த தகவல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் அடிப்படையில் கட்டாயமாக பாடசாலை செல்லவேண்டிய வயது எல்லையான 5-17 வயது வரையிலான மாணவர்கள் 4 இலட்சத்து 52 ஆயிரத்து 661 பேர் இவ்வாறு பாடசாலை கல்வியை பெறமுடியாது உள்ளதாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதில் 51 ஆயிரத்து 249 பேர் எந்தவொரு ஆரம்பக் கல்வியையும் கற்காத சிறுவர்கள் எனவும் அடையாளபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முதலாவது பெண் நீதிபதியான சிவகாமசுந்தரி தனது 81 ஆவது வயதில் நியூசிலாந்தில் காலமாகியுள்ளார். யாழ்.புலோலி மேற்கைப் பிறப்பிடமாக கொண்ட இவர் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூ ரியில் கல்விகற்று சட்டத்துறைக்குள் பிரவேசித்து 1972 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி வழக்கறிஞர் ஆனார்.பின்னர் 1988 ஆம் ஆண்டு, மாவட்ட நீதிபதியாக நியமனம் பெற்று மல்லாகம், மன்னார் மற்றும் கொழும்பு நீதிமன்றங்களில் நீதிபதியாக கடமையாற்றி இறுதியாக 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை திருகோணமலை மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார். இவர் திருகோணமலையில் சேவையாற்றிய காலப்பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்புப் பிரிவை ஆரம்பித்து வைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கில் 33 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணியகம் திறந்துவைக்கப்படவுள்ளது. இந்தப் பணியகம் காங்கேசன்துறையில் இந்த மாதம் திறந்துவைக்கப்படுமென செய்திகள் வெளியாகியுள்ளன. இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வடக்கில் சுங்கத் திணைக்களத்தின் செயற்பாடுகள் முற்றாக முடங்கியிருந்தன. சுமார் 33 வருடங்களாக வடக்கில் சுங்கத் திணைக்களத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமலிருந்தன. வடக்கில் தற்போது நடைபெறும் கடத்தல் சம்பவங்களை கருத்தில் கொண்டு மீண்டும் சுங்கத் திணைக்களத்தின் பணியகத்தை திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை செல்ல விரும்பும் அகதிகள் இலங்கையில் 1983 ஆம் ஆண்டு உள்நாட்டு போர் தொடங்கியபோது அங்கிருந்த ஈழத்தமிழர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு சென்றனர்.தமிழகத்தில், 119 முகாம்களில், 67 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர். மேலும் பொலிசார் அனுமதியுடன் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தமிழகத்தின் வெவ்வேறு இடங்களில் வசித்து வருகின்றனர்.இந்நிலையில், கடந்த 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு போர் முடிவுக்கு வந்ததையடுத்து 5,000 பேர் தாய்நாட்டிற்கு சென்றனர்.இலங்கையில் வசிப்பதற்கு ஏற்ற சூழல் நிலவுவதாலும், அதிகளவில் வேலைவாய்ப்பு கிடைப்பதாலும், சொந்த நாட்டிற்கு செல்ல அகதிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.சமீபத்தில், 46 பேர் இலங்கைக்கு சென்றனர். அதே போல், ஏராளமானோர் நாட்டிற்கு செல்ல தொடர்ந்து விண்ணப்பம் அளித்து வருகின்றனர். இதில், 2006க்கு பின் வந்தோர் தான் தாயகம் செல்ல அதிக ஆர்வம் காட்டுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை மிக மோசமான பட்டியலில் உலகளவில் 2ஆம் இடம்..! உலகில் மக்கள் காணாமல் போதல், காணாமல் ஆக்கப்படுத்தல் போன்ற விடயங்கள் தற்போதும் நீடித்துக்கொண்டே செல்கின்றது எனலாம், அந்தவகையில் கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற போரின் போது காணாமல் போதல் என்பது இலங்கையில் சர்வசாதாரண விடயமாகவே சில தரப்பினரால் பார்க்கப்படுகின்றது.அந்த வகையில், காணாமல் போதல், பலவந்தமாக காணாமல் போகச் செய்தல் ஆகிய விடயங்களில் உலக அளவில் இலங்கை 2 ஆவது இடத்தை பிடித்துள்ளது.குறித்த விபரங்களை ஐக்கிய நாடுகள் சபையின் முகவரகம் தெரிவித்திருந்தது.

கடந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி தொடக்கம் நேற்று 30-0502017வரை விடுமுறை பெறாது பணிக்கு மீள சமூகமளிக்காத படையினர் 1200 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். ராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரோஷான் செனவிரட்ன இந்த தகவலை வெளியிட்டுள்ளார். இதன்படி, 30.05.2017வரை 984 காலாட்படையினரும், 236 கடற்படையினரும், வான்படையினர் 14 பேரும் கைது செய்யப்பட்டு ள்ளனர். இந்தநிலையில், 42,800 பேர் வரை பணிக்கு சமுகமளிக்காது தலைமறைவாகியிருப்பதாக ராணுவ பேச்சாளர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் கடந்த வருடம் சிறுவர்கள் துஸ்பிரயோகம் தொடர்பில 28.02.2017 வரை 207 முறைப்பாடுகள் கிடைத்துள்ள போதும் அவற்றில் 115 முறைப்பாடுகளுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட சிறுவர் விவகாரப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடம் ஒக்டோபர் மதம் வரையில் சிறுவர்கள் துஸ்பிரயோகம் தொடர்பில் 207 முறைப்பாடுகள் கிடைத்துள்ள போதும் அவற்றில் 115 முறைப்பாடுகளுக்கு நிரந்தர தீர்வும், 69 முறைப்பாடுகளுக்கு குறுகிய கால தீர்வும் மேலும் 23 பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டியுமுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விதவைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்ததினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட நலத்திட்டங்களை நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

புகைத்தல்,போதைப்பொருள் பாவனையினால் வருடாந்தம் முப்பத்தையாயிரம் பேர் பலி போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனையினால் ஏற்படும் நோய்களினால் இலங்கையில் வருடாந்தம் முப்பத்தையாயிரம் பேர் பலியாவதாக சுகாதார மற்றும் சுதேஷ வைத்தியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் உலகளாவிய ரீதியில் புகைத்தலினால் மாத்திரம் ஏற்படும் நோய்களினால் பாதிக்கப்பட்டு வருடாந்தம் மூன்று கோடிப் பேர் வரையில் பலியாகின்றனர். எனவே புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையில் ஏற்படும் நோய்களினால் பாதிக்கப்படுபவர்களின் மருத்துவச் செலவுகளுக்கு அதிகளவான நிதி செலவிடப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது

இலங்கையில் நாளொன்றுக்கு 800 இற்கும் மேற்பட்ட கருக்கலைப்புகள்
இலங்கையில் திருமண வயதை எட்டியுள்ள பெண்களில் சேதவீதமானவர்கள் திருமணத்திற்கு முன்னரே கர்ப்பம் தரிக்கின்றார்கள். நாளாந்தம் இலங்கையில் 800 இற்கும் மேற்பட்ட கருக்கலைப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தற்கொலையில் உலகத்தில் நான்காவது இடத்தில் இலங்கை இருக்கின்றது. மது பாவனையில் மட்டக்களப்பு முன்னிலையில் இருக்கின்றது. இவ்வாறான-தொரு சமூகத்தை உருவாக்கியது யார் என்ற கேள்வி உங்கள் அனைவர் மத்தியிலும் இருக்கும். வேறுயாருமல்ல நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் இவ்வாறானதொரு சமூகத்தை உருவாக்கியிருக்கின்றோம்

இலங்கையில் 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு கல்வி வலய முன்பள்ளி அபிவிருத்-திக்கு பொறுப்பான பிரதிக்கல்விப்பணிப்பாளர் எம்.புவிராஜ் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இதுவரை வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 936 ஆக அதிகரித்துள்ளதாக வீதி பாதுகாப்புச்சபை அறிவித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.மோட்டார் சைக்கிள் விபத்துக்களினாலேயே அதிக உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதாகவும் முச்சக்கரவண்டியில் பயணித்தவர்கள் மற்றும் பாதசாரிகள் விபத்துக்களில் அதிகமாக உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்தார்.கவனயீனம் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்துதல் என்பவற்றினாலேயே அதிக விபத்துக்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# உலகச் செய்திகள் சில.....

12 வயதில் தாய்மை அடையும் சிறுமிகள் ருமேனியா நாட்டில் இளவயதிலேயே கர்ப்பமாகும் சிறுமிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் புள்ளியியல் விபரப்படி, 2013ம் ஆண்டு ருமேனியாவில் 15.6 சதவிகிதமும், பல்கேரியாவில் 14.7 சதவிகித குழந்தைகள் இளவயது தாய்மார்களுக்கு பிறந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2014ம் ஆண்டில் மட்டும் 12 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட 2212 பேர் குழந்தைகளை பெற்றெடுத்துள்ளதாக ருமேனியா நிறுவனம் தெரிவித்துள்ள

உலகம் முழுவதும் 10 முதல் 19 வயதுடைய இளம் பருவத்தினர் உயிரிழப்பதற்கு சாலை விபத்துகளே முதல் காரணமாக இருக்கிறது என உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2015-ல் மட்டும் 10 முதல் 19 வயதுடைய இளம் பருவத்தினர், 11 லட்சம் பேர் (தினமும் சுமார் 3,000 பேர்) சாலை விபத்துகளில் உயிரிழந்துள்ளனர். 72,655 பேர் மூச்சு திணறல் நோய்களாலும், 67,149 பேர் தற்கொலை செய்து கொண்டும், 63,575 பேர் வயிறு சம்பந்தமான நோய்களாலும், 57,125 பேர் நீரில் மூழ்கியும் உயிரிழந்துள்ளனர். ஆப்பிரிக்க நாடுகளில் எய்ட்ஸ், மூச்சு திணறல், வயிற்று உபாதை ஆகியவை தான் இளம் வயதினரை அதிக அளவில் பலி கொண்டு வருகிறது என்று அதில் கூறப்பட்டுள்ளது. பெற்றோர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகம் தான் வயது வந்த இளம்பருவத்தினரின் வாழ்வில் குறிப்பிடத்தக்க நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4 மணி நேரத்துக்கு ஒரு பெண் சீரழிப்பு: எங்கே தெரியுமா?இந்திய தலைநகர் டெல்லி கற்பழிப்பின் தலைநகரமாகவும் மாறிவருவதாகவும், தினந்தோறும் குறைந்தபட்சம் நான்கு பெண்கள் இங்கு கற்பழிக்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது. டெல்லியில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஓடும் பேருந்தில் மருத்துவ கல்லூரி மாணவி நிர்பயா கற்பழிக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த கொலை வழக்கில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியது. இந்நிலையில், நாட்டின் தலைநகரமான டெல்லி கற்பழிப்பின் தலைநகரமாக மாறிவருவதாகவும் தினந்தோறும் குறைந்தபட்சம் நான்கு பெண்கள் இங்கு கற்பழிக்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழும் மனிதர்களின் சராசரி வயதெல்லை அதிகமே. என்றபோதும், அமெரிக்காவில் வாழும் பெண்களின் ஆயுட்காலம் 83 வயதுகளே என்றும் தெரியவந்துள்ளது. அதுமட்டுமன்றி, உலகில் ஆயுட்காலம் அதிமாக உள்ள நாடாக மொனாக்கோ விளங்குவதாகவும் மேற்படி ஆய்வின்படி, 2030ஆம் ஆண்டளவில் தென்கொரியப் பெண்களின் சராசரி ஆயுட்காலம் 91 ஆகவும் ஆண்களின் ஆயுட்காலம் 90 ஆகவும் இருக்கும் எனத் தெரியவந்துள்ளது.

பெரும் செல்வந்த நாடுகளிலும் பெண்களின் வயதெல்லை 90ஐ நெருங்கிவந்தாலும், அந்த வயதை அடைபவர்கள் ஒரு சிலரே என்றும் ஏனையவர்கள் 80 வயதுகளிலேயே மரணித்துவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் ஆண்களுடைய சராசரி வயதெல்லை 71 ஆகவும், பெண்களுடைய வயதெல்லை 78 ஆகவும் இருக்கின்றன. உலக நாடுகளின் அதிகூடிய வயதெல்லை உடையவர்களில் இலங்கை 67வது இடத்தில் இருக்கிறது.

உலகின் வல்லரசு நாடும் உலகப் பொலிஸ்காரன் என்று அழைப்படுவதும் அமெரிக்காதான். சர்வ வல்லமை பொருந்திய இந்த நாட்டின் ஜனாதிபதிகளாகப் பலர் இருந்துள்ளார்கள். நான்கு வருடத்திற்கு ஒரு முறை தேர்தல் நடைபெறும் அதில் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டபோது இருந்த செல்வாக்கைப் பார்க்கலாம். இப்படியாகத் தெரிவு செய்யப்பட்ட பத்துப்பேரின் மக்கள் செல்வாக்கு எப்படி இருந்திருக்கின்றது என்று பார்த்தால்..இறுதியாக இருந்த ஜனாதிபதிகள் வரிசையில்...

| | பிடித்திருக்கிறது - | பிடிக்கவில்லை - | பதில் இல்லாதவர்கள் |
|---|---|---|---|
| -Donald Trump | 45% | 46% | 09% |
| -Brack Obama | 68% | 12% | 20% |
| -G W Bush | 57% | 25% | 18% |
| -Bill Clinton | 58% | 20% | 22% |
| -G Busch | 51% | 06% | 43% |
| -Ronald Reagan | 51% | 13% | 36% |
| -Jimmy Carter | 68% | 08% | 24% |
| -Rechard Nixon | 59% | 05% | 36% |
| -John Kennedy | 72% | 06% | 22% |
| -Dwight D Eisenhower | 68% | 07% | 25% |

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா) - 480-00Euro
02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - மட்டக்களப்பு - 480-00
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரிசுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - கிளிசொச்சி - 480-00
04. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மன்
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - திருகோணமலை-480-00
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
06. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
07. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
08. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
09. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00
10. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா-ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - மட்டக்களப்பு - 240-00
11. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - கிளிநொச்சி - 200-00
12. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - வவுனியா - 200-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

**ஆரம்ப இருப்பு 30-04-2016** +224-22

**அன்பளிப்புகள்:-**

**01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின்** - Duisburg + **80-00**
**(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)**

**02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன்** - Duisburg + **80-00**
**(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)**

**03. திருமதி. பராசக்தி. பரமாமி** - London + **80-00**
**(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)**

**04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல்** - Essen + **80-00**
**(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)**

**05.திருமதி அஜந்தி பத்மநாதன்** - London + **80-00**
**(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)**

**06. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா** - Weeze + **80-00**
**(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)**

**07. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம்** - Pforzheim + **20-00**
**08. செல்வி ஐஸ்வர்யா பாஸ்கரன்** - London + **50-00**
**(பிறந்தநாள் அன்பளிப்பு)**

--------
+ **774-22**

**-வங்கிவரி 01.05.2017 -31.05.2017 -11.92**
**01.06.2017 -30.06.2017 -10.30**
----- **22.22** - **22-22**

------------
**30.06.2017ல் கையிருப்பு** + **752-00**

# சங்கீத ஆசிரியை திருமதி கலைவாணி ஏகானந்தராசா அவர்களின் "நாகபூசணி பாமாலை" இறுவட்டு வெளியீட்டுவிழாவும் மனிதநேயப்பணியும்.......

வாழ்வின் படிமங்கள் வரலாறாகுவதும் சாதனைகளாகுவதும் சிலருக்குமட்டுமே சாத்தியப்பாடுடையதாக அமைவதை நாம் காண்கின்றோம். அந்தவகையில்தான் சங்கீத ஆசிரியை திருமதி கலைவாணி ஏகானந்தராஜா அவர்களின் இசைச்சாதனையும் கலைப்பணிகளும் அடங்கும் எனலாம். யேர்மனி வீட்சே நகரில் கடந்த கால்நூற்றாண்டுகளுக்கு மேலாக வசித்துவருகின்ற இவர் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை லண்டன் தமிழ்வானொலியில் இசையமைத்துப் பாடியுள்ள பதிவென்பது சாதனைப் பட்டியலுக்குள் அடங்கிவிடுகின்றதெனலாம்.

திருமதி கலைவாணி ஏகானந்தராஜா அவர்களின் நான்காவது இறுவட்டுவெளியீடு கடந்த 04.6.2017அன்று யேர்மனி கேவலார் நகரில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. கிரேபெல்ட் நயினை நாகபூசணி பாமாலை என்ற (நாற்பதுநிமிட) இறுவட்டின் வெளியீட்டு விழாவானது யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் மண் கலையிலக்கிய சஞ்சிகையின் ஆசிரியருமான திரு.வ.சிவராசாஅவர்களின் தலைமையில் சுமார் 15.40 மணியளவில் ஆரம்பமானது. இவ்விழாவிற்குப் பிரதமவிருந்தினராக (பிரித்தானியா) பொறியியலாளரும் மனிதநேயப் பணியாளருமான கலாநிதி. திரு. சர்வேஸ்வரன் அவர்களும் சிறப்புவிருந்தினராக டோட்முண்ட் சுவிற் சிலி உணவக உரிமையாளர் திரு. கனாபிநானாஅவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

முதலில் மௌனவணக்கத்தைத் தொடர்ந்து விழாவின் முதல் நிகழ்வாய் திருமதிகளான ஆனந்திசர்வேஸ்வரன்இகுலமகள் பதஞ்சலிமற்றும் கீதாஞ்சலிமுருகதாஸ் ஆகியோர் மங்கல விளக்கினை ஏற்றிவைக்க சிவஸ்ரீ கைலாஷ் கிருஷ்ணமோகன் குருக்கள் நடாத்திய பூஜையைத் தொடர்ந்து திரு.பதஞ்சலிஅவர்களின் புத்திரிகளான செல்விகள்: சாதனா மயூரி மற்றும் லயகரிஆகியோரின் தேவாரத்துடன் மங்கல நிழ்வாய் தொடங்கிய நிகழ்ச்சியினைச் சிறப்பாக்க செல்விகள் சாதனாமுருகதாஸ் சர்மிலிபால்ராஜ் மற்றும் சாகித்யா சண்முகரத்தினம் ஆகியோர் பண்ணோடு இணைந்து இசைத்ததமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெற்று இந்தப் பக்திப்பாடல் இறுவட்டு வெளியீட்டுவிழா நிகழ்வினை மேலும் மெருகூட்டியதெனலாம்.

தொடர்ந்து..வரவேற்புரையினை திரு ரகுப்பிரியன் ஏகானந்தராஜா அவர்கள் வழங்கினார். முழநிகழ்ச்சிகளையும் ரவிமாஸ்ரர் அவர்கள் ( திரு.த.இரவீந்திரன் – பொறுப்பாளர் நுவுசுவானொலி) சிறப்புறத் தொகுத்துவழங்கினார். அடுத்த நிகழ்வாக யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் மண் கலையிலக்கிய சஞ்சிகையின் ஆசிரியருமான திரு.வ.சிவராசா அவர்களின் தலைமையுரை இடம்பெற்றது. சங்கீத ஆசிரியை திருமதிகலைவாணி ஏகானந்தராஜா அவர்களின் சாதனைகளையும் மனிதநேயப்பணிகளையும் லண்டன் தமிழ் வானொலி மற்றும் இணையதளங்கள் சஞ்சிகைகள் என்று இலக்கியம் படைக்கின்ற திருமதி. கலைவாணி அவர்களின் பன்முக ஆளுமையையும் சுட்டிக்காட்டியமையுடன் அவரின் படைப்பாக நான்காவதாய் வெளிவருகின்ற இந்த இறுவட்டின் மூலம் பெறப்படுகின்றநிதி இலங்கையில் இடம்பெயர்ந்து வாழகின்ற எம்முறவுகளுள் வசதி குன்றியவர்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்தவதற்கு ஒப்படைக்கப்பட இருக்கின்ற செய்தியினையும் தெரிவித்தமை பெரும் வரவேற்பினையும் பாராட்டுதல்களையும் கரகோசம் மூலம்வழங்கிய அந்தநிமிடம் உன்னத தருணமானதாகவே எனக்குப்பட்டது.

விழாவின் முக்கிய நிகழ்வாக இறுவட்டுக்கள் மேடைக்குக்கொண்டுவரப்பட்டு திரு.திருமதிஏகானந்தராஜா அவர்களின் முன்னிலையில் பிரதம விருந்தினரான பொறியியலாளரும் மனிதநேயப்பணியாளருமான கலாநிதி. திரு. சர்வேஸ்வரன் அவர்கள் வெளியிட சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட டோட்முண்ட் சுவிற் சிலி உரிமையாளர் திரு. நானாஅவர்கள் முதல் இறுவட்டைப் பெற்றுக்கொண்டு அந்தநிழ்வைச் சிறப்பத்தார்கள். இத்தோடு சுருக்கமாகத் தன் வாழ்த்துரையையும் வழங்கினார். எழுத்தாளர் திருமதி ஜெயா நடேசன் அவர்கள் திருமதிகலைவாணி ஏகானந்தராஜா அவர்களுக்குப் பொன்னாடைபோர்த்தி கௌரவம்செய்து வாழ்த்தினார்.

இதனையடுத்து யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் இந்த இசைச்சாதனையைப் பாராட்டும் முகமாக சங்கத்தின் மூத்தஉறுப்பினரான எழுத்தாளர் திருமதி ஜெயா நடேசன் அவர்கள் பொன்னாடையினைப் போர்த்த சங்கத்தின்உபசெயலாளர் திருமதிகீதாபரமானந்தன் அவர்கள் சந்தணமாலை அணிவிக்க யேர்மனிதமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொருளாளர் கவிஞர்திரு.அம்பலவன்புவனேந்திரன் அவர்கள் வடித்த வாழ்த்துக் கவிதையினை வாசித்து வழங்கியதுடன் சங்கத்தின் தலைவர் திரு.வ. சிவராஜா அவர்கள் சங்கீத ஆசிரியை திருமதி கலைவாணிஏகானந்தராஜா

அவர்களின் சாதனையையும் பன்முக ஆளுமையையும் கருத்தில்கொண்டு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் "நுண்கலைவித்தகி" என்னும் சிறப்புப் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தார். சபையே எழுந்துநின்று கரகோசம் செய்து அவருக்குதங்களின் மகிழ்ச்சியினைத் தெரிவித்தகாட்சி மனதை நெகிழச் செய்ததெனலாம். இடைவேவளையைத் தொடர்ந்து இரு சிறுமிகளின் கரகாட்ட நிகழ்வொன்று இடம்பெற்றது

தொடர்ந்து இறுவட்டின் முன்னோட்ட நிகழ்வுமேடையில் காட்சிப்படுத்தியமை மிகச்சிறப்பாகவும் இருந்தது. இதற்குள் இந்த இறுவட்டின் ஆக்கப்பணியில் தொழிநுட்பப் பணியாற்றிய திரு.பதஞ்சலி அவர்களுக்கான கௌரவத்தினை திரு.ஏகானந்தராஜா அவர்கள் நிறைவேற்ற இப்பேறப்பட்ட நல்லபணியாளர்களுடன் தானும் பங்குகொண்டதில் மகிழ்ச்சியடைந்ததுடன் ஒலி-ஒளிச்சேர்க்கையில் தனது பணிகள் எவ்வாறு அமைந்தனவெனத் தெரிவித்த அவர் ஆசிரியை திருமதிகலைவாணிஏகானந்தராஜா அவர்களுக்குத் தன் வாழ்த்தினையும் கூறிவிடைபெற்றார்.

இதனையடுத்து ஆய்வுரை வழங்குமாறு யே.த.எ.சங்கத்தின் செயலாளர் திரு.பொன். புத்திசிகாமணி அழைக்கப்பட்டார். நகைச்சுவையுடன் தொடங்கிய இவரது ஆய்வுரையில் இவ் இறுவட்டின் படைப்பாளி ஆசிரியை திருமதிகலைவாணி ஏகானந்தராஜா அவர்களுக்குத் தன் வாழ்த்தினையும் விற்பனையால் கிடைக்கின்ற பணத்தினை தாயகத்தில் அல்லலுறுகின்ற எம்முறவுகளுக்கு அனுப்புவதற்கு இவர்கொண்டுள்ள நல்ல எண்ணத்தினையும் பாராட்டினார். பாடல்கள் சிறப்பாக அமைந்துள்ளன என்றும் இவரின் இப்பணிமேலும் வெவ்வேறு வடிவங்களில் வெளிக்கொணரப்படவேண்டும் என்றும் தன் ஆவலையும் கருத்துக்களையும் தெரிவித்தார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி திரு. சர்வேஸ்வரன் அவர்களுக்கான கௌரவ நிகழ்வு இடம்பெற்றது. திரு. ஏகானந்தராஜா அவர்கள் திரு. சர்வேஸ்வரன் அவர்களைப்பற்றிய அறிமுகத்தை வழங்கி விழாவில் பங்கெடுத்தமைக்கு நன்றிதெரிவித்துப் பொன்னாடையணிவித்தார். திருமதி கலைவாணி அவருக்கு மலர்ச்செண்டு வழங்கிக் கௌரவித்ததைத் தொடர்ந்து கலாநிதி திரு. சர்வேஸ்வரன் அவர்கள் தன் உரையில் இவ்விழாவில் கலந்துகொள்வதை மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளதென்றும் கேட்டவுடனே நேரமொதுக்கியதையும் இவ்விழாவில் கலந்துகொள்ள இன்னுமொரு காரணம் மனித நேயப்பணி என்பதனையும் தெரிவித்து தான் சார்ந்துள்ள ஒரு அமைப்பினால் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற நற்பணிகளை கணனியின் உதவியுடன் நிகழ்த்திக்காட்டினார்.

மனதை வருடுகின்ற பலகாட்சிகளும் மனிதும் உறைந்துள்ள மாமனிதர்களையும் கண்ணுற்றபோது இந்தவிழாவானது வேறுஒரு இலக்கினை நோக்கிப் பயணிப்பதாக உணரமுடிந்தது.

இதனையடுத்து கிறீபெல் நகர நடன ஆசிரியை திருமதி ரஜனிஅவர்களின் மாணவிகள் நிகழ்த்திய பரதநாட்டியம் இடம்பெற்று அனைவரையும் ஆசுவாசப்படுத்தியது. தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம்பெற்றன.கவிஞர். திரு. அம்பலவன்புவனேந்திரன் அவர்கள் கலாநிதி திரு. சர்வேஸ்வரன் அவர்களுக்கு தன் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் வழங்கியதனைத் தொடர்ந்து கவிமணி திரு. குகதாசன் திரு.கந்தையாமுருகதாசன் திருமதி. கீதாபரமானந்தன் திருமதி நகுலாசிவநாதன் திருமதி வரதவாணிதிரு.ஞானக்குமார் ஆகியோரின் பங்குகொண்டு மிகச்சுருக்கமாகதம் வாழ்த்துரைகளை நிறைவுசெய்தனர். எழுத்தாளர் திருமதி சந்திரகௌரிசிவபாலன் அவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளமுடியாத காரணத்தினால் தனது வாழ்த்துரையையும் திருமதி கலைவாணி ஏகானந்தராஜா அவர்களின் சிறுகதை அளுமையையும் பற்றிய பதிவு செய்தனுப்பிய ஒலிநாடா விழாவில் ஒலிபரப்பானது.

இவ்விழாவினில் கலந்துகொண்ட நல்லிதயங்களின் அன்பளிப்பாகத் திரட்டப்பட்டநிதி திரு.புத்திசிகாமணி அவர்களினால் மனிதநேயப்பணியாளர் கலாநிதி. திரு. சர்வேஸ்வரன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து ஏற்புரைக்காக நிகழ்வின் நாயகி திருமதி கலைவாணி ஏகானந்தராஜா அவர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டார். நிகழ்வின் முக்கியத்துவம் இறுவட்டின் ஆக்கப்பணிகள் வேலைகளில் எற்பட்டசுமைகள் இறுவட்டாய் ஆக்கம்பெறுவதில் தனது உழைப்பு வலிகள் நேர ஒதுக்கீடு என்று ஆரம்பித்து அவற்றை தன்னோடு செயலாக்க உழைத்ததன் கணவர் திரு. ஏகானந்தராஜா அவர்கள் தொடங்கி அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்ததுடன் விழாவுக்கு வருகைதந்து சிறப்பித்த பிரதம-சிறப்புவிருந்தினர்கள் உட்பட பங்கேற்று நிகழ்த்துக்காட்டிய கலைஞர்கள் வாழ்த்ததுரை வழங்கியோருக்கும் நன்றி தெரிவித்தார்..இறுவட்டு வெளியீட்டுவிழாவான இந்நிகழ்வு மனிதநேயப்பணியாக மாற்றம் கண்டமைதான் முழுநிறைவாக அனைவர் மனதிலும் நிழலாடியது. இரவுப் போசனத்துடன் இரவு எட்டு மணியளவில் விழா இனிதே நிறைவுபெற்றது.

மண் கலையிலக்கிய சஞ்சிகைக்காக யேர்மனியிலிருந்து.. கவிச்சுடர்

# இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும்

இணைந்து வழங்கும் இவ்வாண்டு நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், தமிழ் வளர்ச்சி இலக்கியம், அயலகப் படைப்பாளிகளின் நூல்கள் என விருதுக்காக பத்து (10) நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இரா. உதயணன் இலக்கிய விருதுடன் தலா ரூபா 10,000 வீதம் ரூபா (ஒரு லட்சம்) 100,000 பணப் பரிசும் வழங்கப்படவிருக்கின்றன.

இவ்வாண்டுக்கான விருதுத் தேர்வுக்காகப் படைப்பாளிகள் நூல்களை அனுப்பி வைக்கலாம்.

- அனைத்துப் படைப்புகளும் முதற் பதிப்பாக இருத்தல் வேண்டும்.
- அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள் தவிர்ந்த ஏனைய துறைசாரா நூல்கள் அனைத்தும் இலங்கையில் வாழும் எழுத்தாளர் களினால் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- நூல்கள் இலங்கையில் பதிப்பித்திருக்க வேண்டும்.
- ISBN இலக்கம் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.
- அனைத்து நூல்களும் 2016 தை முதலாம் திகதி தொடக்கம் 2016 மார்கழி 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதிப்பித்திருக்க வேண்டும்.
- தேர்விற்காக மூன்று பிரதிகள் (நூல்கள்) அனுப்பப்பட வேண்டும்.
- நூல்கள் யாவும் 2017.07.31 திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

நூல்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

இரா.உதயணன் இலக்கிய விருது - 2017
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்,
இல: 9, 2/1 நெல்சன்இடம்
கொழும்பு 06. இலங்கை.
இரா.உதயணன்
இலக்கிய விருது : 2017

---

ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி.ஞானசேகரன் எழுதிய "ஐரோப்பிய பயண அனுபவங்கள்" பற்றிய பன்முகப்பார்வை.......

கொழும்புத் தமிழ்ச்சங்க இலக்கிய களம் நிகழ்வு 09.06.2017 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் டாக்டர்.சி.அநுஷ்யந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திருமதி.வசந்தியாபரன், திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன், உடுவை எஸ்.தில்லைநடராஜா ஆகியோர் முறையேபயண இலக்கியத்தின் கூறுகள், மொழிநடை, தரவுகளின் செம்மையும் பயன்பாடும் ஆகிய தலைப்புக்களில் உரையாற்றினார்கள். நூல் ஆசிரியர் தி.ஞானசேகரன் ஏற்புரை வழங்கினார்.

# நூல் : குதிரை வாகனம் (நாவல்)

## ஆசிரியர்: வி.ஜீவகுமாரன் - டென்மார்க்
## பதிப்பு : 2017

டென்மார்க் நாட்டில் மரணப்படுக்கையில் இருக்கும் ஒருவரது நனவிடை தோய்தலாகவும் சமகால நிகழ்வுகளின் பதிவாகவும் வார்க்கப்பட்ட இந்த நாவல் ஈழத்து சமூக வரலாற்றில் ஆறு தசாப்த காலத்தில் நிகழ்ந்த, நிகழ்ந்துகொண்டிருக்கிற சமூக மாற்றத்தின் வெட்டு முகம் எனக் கொள்ளத்தக்க தகைமை கொண்டது. மரணப்படுக்கையில் இருப்பவர் யாழ் குடாநாட்டின் காரைநகரைச் சேர்ந்த வணிகப் பெருமகன் சண்முகத்தாரின் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர். தாத்தா சண்முகத்தாரின் பெருமைகள், சொந்த நாட்டிலுள்ள குலதெய்வமான முருகன் கோயிலுடன் இணைந்த வாழ்வு, அந்த கோயிலுக்கு தங்கள் குடும்பத்தின் பெயரால் கொடுக்கப்பட்ட குதிரை வாகனம், குடும்பத்தின் பெருமையையும் அடையாளத்தினையும் நிலை நாட்டும் மூதாதையர் சொத்தான பெரிய வீடு இவையெல்லாம் காலவோட்டத்தில் சரிந்து போகின்றன.

கோயில் குருக்கள், சாம்பவசிவ குருக்களின் மகன் பாலனின் நட்பு பால்ய காலம் முதல் டென்மார்க் நகர்வரை தொடர்வதும் நண்பர்கள் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் மற்றவரது குடும்ப நலனில் அக்கறை காட்டும் பண்பும் நட்பின் இலக்கணங்கள். 1958 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இனக்கலவரங்கள், விடுதலை இயக்கங்களின் தோற்றம், குடும்பத்தில் வளர்ப்பு மகளாக உரிமை பெற்ற பபிதா என்ற சிங்களப் பெண் இயக்கத்தில் சேருதல் போன்ற விடயங்கள் நாவலோட்டத்தில் பதிவாகின்றன. வாசிக்கத் தொடங்கினால் வாசித்து முடித்த பின்னரே மற்றவேலை என நிர்ப்பந்திக்கும் ஒரு ஒட்டிழுப்பு இந்த நாவலுக்கு உண்டு. சிக்கல்கள் அற்ற அத்தியாய அடுக்குமுறை, சிறந்த மொழி நடை, நேர்த்தியான விவரணம் என்பன இந்த நாவலை தரமான நாவலாக ஆக்கியிருக்கிறது. ஜீவக்குமாரனுக்கு மேலும் ஒரு வெற்றி கிடைத்திருக்கிறது. இந்த நாவலைப் பெறவிரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி.....

news@jeevakumaran.com


# தமிழியல் விருது 2017 - எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் - மட்டக்களப்பு.

உயர் தமிழியல் விருது: இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மிகச் சிறந்த மூத்த படைப்பாளி ஒருவருக்கு எழுத்தாளர் ஊக்குவிப்புமைய ஸ்தாபகர் ஓ.கே.பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது வழங்கிக் கௌரவிக்கப்படும்.
தமிழியல் விருது:
தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மூத்த படைப்பாளிகள் 3 பேருக்கு, வவுனியூர் ஸ்ரீராமகிருஷ்ணா கமலநாயகி தமிழியல் விருதுடன் தலா ரூபா 15,000- வழங்கிக் கௌரவிக்கப்படும்.
தமிழ்ப்பணியாளர் தமிழியல் விருது: ஈழத்துப் படைப்பாளி அல்லாத அயல்நாட்டவர் ஒருவருக்கு கல்விமான் வ.கனகசிங்கம் தமிழியல் விருதுடன் ரூபா 25,000- வழங்கிக் கௌரவிக்கப்படும்.
இனநல்லுறவு தமிழியல் விருது:இன நல்லுறவுக்காக உழைத்த சிங்களமொழி படைப்பாளர் ஒருவருக்கு வணபிதா சந்திரா அடிகளார் தமிழியல் விருதுடன் ரூபா 10,000- வழங்கிக் கௌரவிக்கப்படும்.
சிறந்த நூலுக்கான தமிழியல் விருது: 2015ல், 2016ல் வெளிவந்த சிறந்த 25 நூல்களுக்கு, தலாரூ10,000-வழங்கிக் கௌரவிக்கப்படும்.
ஓவியருக்கான தமிழியல் விருது: மிகச் சிறந்த ஓவியர் ஒருவருக்கு ஓவியர் கிக்கோ தமிழியல் விருதுடன் ரூபா 10,000- வழங்கிக் கௌரவிக்கப்படும்.
2015ஆம், 2016 ஆம் ஆண்டுக்கான தமிழியல் விருதுக்கான நூல்களைத் தேர்வு செய்ய படைப்பாளிகளிடம் இருந்து நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஈழத்திலும் வெளிநாடுகளிலும்,வாழ்கின்ற ஈழத்து தமிழ்ப் படைப்பாளிகள் நூலுக்கான தமிழியல் விருதுக்காக நூல்களை அனுப்பி வைக்கலாம். நாவல், சிறுகதை, கவிதை, குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம், விடலை இலக்கியம், நாடகம், அறிவியல், ஆய்வியல், வரலாறு, பழந்தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு, தொழில்நுட்பம் எனப் பல்துறை சார்ந்த நூல்களை தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம்.
நூல்களின் 3 படிகள் அனுப்பப் பெறுதல் வேண்டும்.நூல்கள் 2015 ஜனவரி 1 முதல் 2016 டிசம்பர் 31 காலப்பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.முதல் பதிப்பு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். நூல்கள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.07.2017 ஒரு படைப்பாளி, எத்தனை வகையான படைப்புக்களையும் அனுப்பி வைக்கலாம்.நூலுடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் கொண்ட விபரத்தினை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

-டாக்டர் ஓ.கே. குணநாதன்


எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு, இலங்கை. தொ.பேசி : 077-6041503, 065-2226658 மின்னஞ்சல் : okkuna@gmail.com

# நூல் அறிமுகம்...



தொடர்புகளுக்கு..

shabesan1975@gmail.com




kuna.kaviyalakan@gmail.com




சங்கீத ஆசிரியை திருமதி கலைவாணி ஏகானந்தராசா அவர்களின்
இறுவெட்டு வெளியீட்டுவிழா - 04.06.2017 யேர்மனி



Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

ERDE

MANN
Germany / Ausgabe 184



Helmut Kohl

03.04.1930 – 16.06.2017

Bundeskanzler - யேர்மனி கான்சிலர்

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 15€ |
| | ஏனைய நாடுகள் | 20€ |